விலை: 60.00
பக்கங்கள் - 24

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a News Paper in Sri Lanka

**கல்யாண மாலை**
சர்வதேச இலவச திருமண சேவை



T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 164 வள்ளுவர் ஆண்டு 2056 வைகாசி 18 ஞாயிற்றுக்கிழமை (01.06.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## உள்ளூராட்சி உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

2025ஆம் ஆண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின்படி அந்தந்த வட்டாரங்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மற்றும் தெரிவு செய்து அனுப்பியுள்ள உறுப்பினர்களின் பெயர்கள் மாவட்டத்தின் அடிப்படையில்

23ஆம் பக்கம் பார்க்க

## தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட 15 அமைப்புகளுக்குத் தடை

### வெளியானது வர்த்தமானி

(கொழும்பு)

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட தடை செய்யப்பட்ட அமைப்புகள் மற்றும் நபர்களின் பெயர்களை அறிவித்து புதுப்பிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சம்பத் துய்ய கொந்தவினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

அதில் 15 அமைப்புகள் மற்றும் 217 நபர்களின் பெயர் விபரங்கள் குறித்த வர்த்த

23ஆம் பக்கம் பார்க்க

## புதிய கொரோனா திரிபு இலங்கையில் கண்டுபிடிப்பு

### சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறு மக்களுக்கு அறிவிப்பு

(கொழும்பு)

ஆசிய பிராந்தியத்தில் தற்போது பரவி வரும் கொவிட் மாறுபாடு இலங்கையிலும் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே சுகாதாரநடைமுறையைப்பின்பற்றுமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக அகதி முகாமிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பியவர்

### சட்டப்படியே கைது – அமைச்சர் பிமல்

(கொழும்பு)

சட்டபூர்வமற்ற வழிகள் ஊடாக நாட்டை விட்டு வெளியேறியவர்களை கைது செய்ய பயன்படுத்தப்படும் சட்டத்தின் கீழ் தமிழ்நாடு அகதி முகாமிலிருந்து யாழ்ப்பாணம் திரும்பியவர் கைது செய்யப்பட்டுள்ளார் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தனது சமூக ஊடக பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

## பூநகரியில் இளைஞன் வெட்டிக் கொலை

(பூநகரி)

பூநகரியில் இளைஞன் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 6.30 மணியளவில் பூநகரி தம்பிராய் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் பூநகரி செம்பங்குன்றுப் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி பிரணவன் (வயது-28) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞனை

23ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் ஒவ்வொரு ஆண்டும் பாடசாலைகள் மூடப்படுகின்றன

### இது எமக்கு ஆபத்தானது – ஆளுநர் வேதநாயகன்




(யாழ்ப்பாணம்)

வடக்கில் ஒவ்வொரு ஆண்டும் பாடசாலைகள் மூடப்பட்டு வருகின்றன. தரம் 1 அனுமதிக்காக வரும்பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடைந்து வரு

23ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் நகைகளை கொள்ளையடித்த பசில்

### சரத் பொன்சேகா தெரிவிப்பு



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் வைத்திருந்த தங்க நகைகளில் அரைவாசியை முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ கொள்ளையடித்ததாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சுமத்தியுள்ளார்.

அண்மையில் அவர் வழங்

23ஆம் பக்கம் பார்க்க

## எரிபொருள் விலையில் மாற்றமில்லை

(கொழும்பு)

எரிபொருள் விலை திருத்தம் செய்யப்படவில்லை என இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மே மாதம் நிலவிய விலையே ஜூன் மாத

04ஆம் பக்கம் பார்க்க

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மாங்குளத்தில் நேற்று கவனயீர்ப்பு

(முல்லைத்தீவு)



காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளைத் தேடி தொடர்ச்சியாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 2017 மார்ச் மாதம் 8ஆம் திகதி முதல் ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று 3007ஆவது நாளை அடைந்துள்ள நிலையில் நேற்றுக் காலை மாங்குளம் நகரில் உறவுகள் மாபெரும் போராட்டம்

23ஆம் பக்கம் பார்க்க

## 26 வயது இளைஞன் கொடிகாமத்தில் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் மந்துவில் பகுதியைச் சேர்ந்த 26 வயதான இளைஞன் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் அவருடைய வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி

தரம் 6 – O/L வரையான மாணவர்களுக்கு விஞ்ஞான, கணித பாடங்கள் வீட்டிற்கு வந்து தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் கற்பிக்கப்படும்.

**077 639 1935**

(4428)

## Digitec நிறுவனத்தில் வேலை வாய்ப்பு

யாழ். மத்தியில் பணியாற்றக்கூடிய CCTV, PC Technician, Electricians மற்றும் அலுவலக முகாமையாளர் (பெண்) தேவை. அனுபவம் வாய்ந்தவர்களுக்கு முன்னுரிமை. கவர்ச்சிகரமான சம்பளம்

**077 868 8517**

(1189)

## வேலையாட்கள் தேவை

சைவ உணவகம் ஒன்றிற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

1. உணவு பரிமாறுபவர்கள்
2. காசாளர்
3. பில் கிளார்க்
4. றொட்டி வேலையாட்கள்
5. குசினி வேலையாட்கள்
6. பிரதான சமையலாளர்
7. சுத்திகரிப்பாளர்
8. இலகு ரக வாகன சாரதி (45 வயதுக்கு மேல்)
9. அலுவலக உதவியாளர்(பெண்கள்)
10. HRM, களஞ்சியக் காப்பாளர்
11. ரீமேக்கர்
12. மரக்கறி வெட்டுபவர்கள்
13. றொட்டி போடுபவர்கள்
14. தோசை போடுபவர்
15. வெளிக்கள உத்தியோகத்தர்

**7/3, யாழ். வீதி, சிறாம்பியடி.**

**077 791 7753, 021 221 6633**

(C-3090)

## பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

யாழ். நகரில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு இரவு நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை. நகரை அண்டியவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு :

**077 936 1427**

(4431)

## மணமகள் தேவை

17.03.1985 இல் பிறந்த இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த திருவோணம் நட்சத்திரம், கிரக பாவம் 50, 8 இல் செவ்வாய் உயரம் 5' 6" பிரான்ஸ் PR உடைய அரச தொழில் புரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (பிரான்சில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை)

**077 053 1950**

(4432)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் சந்திக்கு அண்மையில் பிரதான வீதியில் 5.5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(Business Area)

**077 601 1135**

**021 2053 988**

(4439)

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1977 ஆம் ஆண்டு, உத்திரட்டாதி நட்சத்திரம், சொந்தமாகப் பலசரக்குக் கடை வைத்திருக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :

**076 860 5172**

(4435)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் 3 பரப்பு வெற்றுக் காணியும் மற்றும் 5 ½ பரப்பு வெற்றுக்காணி அத்துடன் பருத்தித்துறை வீதி 1 ம் ஒழுங்கை (ஆரியகுளம் அருகே) 3 3/4 பரப்புள்ள காணிகள் விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும். (தரகர்கள் அவசியம் இல்லை.)

**077 892 8094, 076 995 2499**

(4426)

## வட இலங்கை சுதேச வைத்திய சபை அங்கத்தவர்களை இணைத்தல் - 2025

பொதுச்சபை அங்கத்தவர்களை மேலதிகமாக இணைத்தல் தொடர்பாக உரிய அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தினை கீழ்வரும் உத்தியோகத்தர்களிடம் 04.06.2025 முதல் 17.06.2025 வரை பெற்று பூரணப்படுத்தி 17.06.2025 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பதிவுத்தபாலில் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

1. Dr.க.திருலோகமூர்த்தி DAM (தலைவர்)
   கௌரி வைத்தியசாலை, கிளிநொச்சி
   T.P : 077 068 7392
2. பரம்பரை மருத்துவர் அ.ஜெயகுமார் (செயலாளர்)
   T.P : 077 666 8918

தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.

Dr.க.திருலோகமூர்த்தி
தலைவர்
வட இலங்கை சுதேச வைத்திய சபை

(C-3091)


## விற்பனைக்கு

1. யாழ். Brown வீதியில் நீராவியடி பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் Brown வீதி முகப்புடன் 06 ½ பரப்பு, 03 ½ பரப்பு, 03 பரப்பு காணியும்
2. யாழ். வைத்தியசாலை வீதியில் லேடன் கம்பனிக்கு முன்பாக 06 பரப்பு காணியும்
3. யாழ். கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நாவலர் வீதி முகப்புடன் 12 பரப்பு காணியும், 06 பரப்பு காணியும்
4. யாழ். தட்டாதெருச் சந்திக்கு அண்மையில் K.K.S வீதி முகப்புடன் 10 பரப்பு காணியில் அமைந்த மாடிக் கட்டடமும்
5. யாழ். வைத்தியசாலை வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 16 அடி அகலமும் 216 அடி நீளமும் கொண்ட தனிக் கடையும் உடன் விற்பனைக்குண்டு.

**T.P : 077 882 9796**

(C-3087)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1947 – 09 – 13

மறைவு 2018 – 05 – 20

அமரர்

**சின்னத்தம்பி பொன்னம்பலம் (மகாலிங்கம்)**

[கார் உரிமையாளர் பஸ் தரிப்பிடம் – சுன்னாகம்]

திதி : பூர்வபக்க ஷஷ்டி

ஏழாண்டுகளாகிறது அப்பா
உங்களைப் பிரிந்து – ஏனோ
உம் நினைவுகளை மறந்துவிட
முடியவில்லை அப்பா!
பார் போற்ற எம்மை வாழச் செய்தீர்
இறைவன் திருவடியில்
இழைப்பாறுங்கள் அப்பா!

ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

பிரிவால் துயரும்
குடும்பத்தினர்

(4436)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின்
சங்கீத ஆசிரியை

அமரர் **கவிதா ஜெயக்குமார்**

கலைத்தாயவளாய் கல்லூரியில்
இசைத் தென்றலாய் தினம்
இன்னிசை மீட்டிய இனிய ராகமே
நின் இசையாய் வசமாகி
வருவாய் இசை தருவாய்
என்று ஏங்கிய எம்மை
கண்ணீரால் அஞ்சலிக்க விட்டு
காத தூரம் சென்றதேனோ!
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நலன்புரிக் கழகம்
யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி

(4434)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நூலகம் எரிப்பு 44 ஆண்டுகள் நிறைவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் 44 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி சிங்கள வன்முறைக்குழு ஒன்றினால் யாழ். நூலகம் தீயிட்டு எரிக்கப்பட்டது. தென்கிழக்காசியாவிலே மிகப் பெரிய நூலகமாகக் கருதப்பட்ட இந் நூலகத்தில் சுமார் 97,000 அரிய நூல்கள் எரிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும். (நி-8)

# தொடரும் சீரற்ற காலநிலை
# அதிகரிக்கும் சிக்குன்குனியா
## இலங்கை வைத்தியர் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)........................**

**தற்போது நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சிக்குன்குன்யா பரவும் வேகம் அதிகரித்து வருவதாகச் சுகாதாரத் தரப்பினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துரைத்த இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுரந்த பெரேரா தற்போது டெங்கு நோய் பரவலும் அதிகரித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவானோர் சிக்குன்குன்யாவினால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

கர்ப்பிணித் தாயொருவர் சிக்குன்குன்யா நோயினால் பாதிக்கப்படுவாராயின் அவர் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படும்.

வயிற்றிலுள்ள சிசு தொடர்பிலும் கவனம் செலுத்தப்படும் எனவும் இலங்கை வைத்திய சங்கத்தின் தலைவர் வைத்தியர் சுரந்த பெரேரா தெரிவித்துள்ளார். (நி-8)


# மணிவிழா வாழ்த்துக்கள்

திருமதி. லலிதாம்பிகை (SLTS-I)
மகேஸ்வரன்

சேவை விபரம்

- தேசிய இளைஞர் சேவைகள் கழகம் (01.03.1988-29.02.1992)
- யா/ஜோன் பொஸ்கோ வித்தியாலயம் (01.03.1992-01.02.1993)
- பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலை (02.02.1993-02.01.1995)
- யா/கொக்குவில் இந்துக் கல்லூரி (03.01.1995-01.10.1995)
- யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் (02.10.1995-31.10.1996)
- யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை (01.11.1996-30.05.2025)




(4430)

வெஞ்சினம் கொண்டோரையும்
கொஞ்சிக் கதைபேசி அரவணைத்தவளே
நெஞ்சுரம் கொண்ட செயல்வீரி- நீ
துஞ்சாமல் அரச பணி முடித்தே

மஞ்சுளாவும் வானெல்லை மகேஸ்வரனார்
- துணைகொண்டு
எஞ்சிய காலமெல்லாம் மகிழ்வாய் வாழ்ந்திட
நெஞ்சார வாழ்த்துகிறாள் வேம்படியாள்.

வாழ்த்துவோர்- ஆசிரியர் நலன்புரி கழகம்,
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை


# அம்புலன்ஸ் சாரதிகளுக்குத் தட்டுப்பாடு
# நால்வரை தற்காலிகமாக நியமிக்க திட்டம்
## சுகாதார சேவைகள் பணிப்பாளர்

அம்புலன் சாரதிகள் நான்கு பேரை தற்காலிகமாக நியமிக்கத் திட்டமிட்டிருப்பதாகச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் அர்ச்சுனா இராமநாதனினால், அம்புலன்ஸ் சாரதிகள் பற்றாக்குறை இருப்பதாகச் சுட்டிக் காட்டியதற்குப் பதில் வழங்கும் போதே அவர்மேற்கொண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யாழ். மாவட்டத்தில் கடமையாற்றிய ஐந்து அம்புலன்ஸ் சாரதிகள் ஓய்வு பெற்றுள்ளதனாலேயே தற்போது அம்புலன்ஸ் சாரதிப் பற்றாக் குறை நிலவுகிறது.

அதை நாம் உடன் நிவர்த்தி செய்யத்திட்டமிட்டுள்ளோம். அதற்கமைவாக நான்கு சாரதிகளைத் தற்காலிக நியமன அடிப்படையில் உள்ளீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அவர் தெரிவித்தார். (க-நி-8)

## ஊழல் தொடர்பில்
# இதுவரை 1,726 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இந்த ஆண்டின் முதல் 4 மாதங்களில் கையூட்டல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் 1,726 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றுள் 200 முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. போதிய உண்மைகள் இல்லாமை, கையூட்டல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டில் உள்ளடங்காமை உள்ளிட்ட காரணங்களால் 450 முறைப்பாடுகளை விசாரிக்கவில்லை என கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக் குழு குறிப்பிடுகிறது.

இதேவேளை, குறித்த காலப்பகுதியில் கையூட்டல் தொடர்பாக 24 வழக்குகளும் ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் 7 வழக்குகளும் சட்ட விரோத சொத்து ஈட்டல் தொடர்பில் 2 வழக்குகளும் உயர் நீதிமன்றத்திற்கு விசாரணைகளுக்காக மாற்றப்பட்டுள்ளதாகக் குறித்த ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (நி-8)


## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ/து)

### வருடாந்த பொதுச்சபைக்கூட்டம்

மேற்படி சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக்கூட்டம் எதிர்வரும் 05.06.2025 வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு சங்கத் தலைவர் திரு ஆ.நடராசா அவர்களது தலைமையில் சங்கானை கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் இக்கூட்டத்திற்கு பொதுச்சபை பிரதிநிகளுக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. கடிதங்கள் கிடைக்கப்பெறாத பொதுச்சபை உறுப்பினர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கூட்டத்தில் கலந்துகொள்வதுடன் சங்கத்தில் ஆவணங்களை பார்வையிட விரும்புவோர் காரியாலய கடமை நேரத்தில் பார்வையிட முடியும் என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்ஙனம்,
செயலாளர்.

## மீசாலை கிழக்கில்
### காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கில் வீடு கட்டுவதற்கு அல்லது வியாபாரத்திற்கு சிறந்த 5 பரப்பு நிலம் விற்பனைக்குண்டு

தொடர்பு 0776 544 540 (சி-159)

## பணியாளர் தேவை

ஆண் ஊழியர்களுக்கான பணி வெற்றிடங்கள்


- Casheir (காசாளர்)
- Bill போடுபவர்கள்

வேலை, நேரம், சம்பளம் போன்றவை நேரில் கலந்துரையாடப்படும்.

தொடர்புகளுக்கு: 077 882 2741
ஸ்ரீ சாயிபவன் உணவகம், யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# A Tribute of Gratitude and Celebration



Happy 60th Birthday & Warm Wishes on Your Retirement!

We extend our heartfelt wishes to

**Mrs.Lalithambikai Maheswaran**

as she celebrates her 60th birthday and retires after a lifetime of dedicated service in education.

Your wisdom, patience, and unwavering commitment have inspired generations. Your legacy will live on in the hearts and minds of all those you've taught and guided.


May this new chapter of life bring you peace, good health, and countless moments of joy.

(4440)

Best Wishes!

**With love and respect, Friends and Relatives**


# தேசிய கராத்தே அணிக்கு யாழிலிருந்து மூவர் தெரிவு



தேசிய கராத்தே அணி வயது 16/17 பிரிவினருக்கான தெரிவுப் போட்டிகள் கொழும்பு பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் குமித்தே பிரிவில் மூன்றாம் இடத்தினைப் பெற்று யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ஜே. ஆர்.பியன்பெனோ, யாழ். புனித பரியோவான் கல்லூரி மாணவன் ஜே. தமிழ்செல்வன் மற்றும் யாழ் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவி ஜே.ஆர்.பி.ஆன்திவிஷனா ஆகியோர் தேசிய கராத்தே அணியில் இடம் பிடித்துள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிகளை சென்செய் எஸ்.ரஞ்சித் வழங்கியிருந்தார். அத்துடன் வடமாகாணத் தில் இருந்து முதல் தடவையாக தேசிய அணியின் தெரிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் இவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-3)

## புதிய கொரோனா...

ஓமிக்ரோன் வைரஸ் துணை திரிபுகளான LF.7 மற்றும் XFG ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் இலங்கையில் இனங்காணப்பட்டுள்ளதாக மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் வைரஸ் நோய்களுக்கான நிபுணர் ஜூட் ஜெயமஹா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல மருத்துவமனைகளில் இருந்து பெறப்பட்ட உயிரியல் மாதிரிகள் குறித்து மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் நடத்திய ஆய்வின் மூலம் இது உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்திய நிபுணர் டாக்டர் ஜூட் ஜெயமஹா குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந்த கோவிட் மாறுபாடு குறித்து தேவையற்ற அச்சம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டாம் என அவர் வலியுறுத்தினார்.

கர்ப்பிணித் தாய்மார்கள், முதியவர்கள் மற்றும் நாட்பட்ட நோய்வாய்ப்பட்ட நோயாளிகள், பாதிக்கப்படக் கூடிய குழுக்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதனால் முகக் கவசம் அணிவது மற்றும் நெரிசலான இடங்களைத் தவிர்ப்பது போன்ற சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது முக்கியம் என சுகாதார அதிகாரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

கோவிட் வைரஸின் புதிய வகைகள் அவ்வப்போது பரவுகின்றன. மேலும் இது தொடர்பாக சுகாதாரத் துறை தொடர்ந்து விழிப்புடன் இருப்பதால், தேவையற்ற அச்சம் வேண்டாம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை காலி தேசிய மருத்துவமனையில் சமீபத்தில் உயிரிழந்த ஒன்றரை மாதக் குழந்தையும் கோவிட் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. குழந்தையின் உயிரியல் மாதிரி கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு பரிசோதனைக்காக அனுப்பப்பட்டதில் இது உறுதி செய்யப்பட்டதாக மருத்துவமனை இயக்குநர் தெரிவித்தார்.

எனினும் ஆசியாவில் தற்போது பரவி வரும் புதிய திரிபாக இந்த வைரஸ் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் கூறினார்.(ம-4,7)


## எரிபொருள்...

மும் காணப்படுமென இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஓட்டோ டீசல் ஒரு லீற்றரின் விலை 274 ரூபாவாகவும் சுப்பர் டீசல் ஒரு லீற்றரின் விலை 325 ரூபாவாகவும் மண்ணெண்ணெய் ஒரு லீற்றரின் விலை 178 ரூபாவாகவும்,

ஒக்டேன் 95 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 341 ரூபாவாகவும் ஒக்டேன் 92 ரக பெற்றோல் ஒரு லீற்றரின் விலை 293 ரூபாவாகவும் தொடர்ந்தும் விற்பனை செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)


# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 05.05.2025 திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் தில்லையம்பலவாணர் கோபாலகிருஷ்ணன்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 03.06.2025 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் 04.06.2025 புதன்கிழமை வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் அவரது இல்லத்தில் காலை 10.30 மணியளவில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

புத்தூர் மேற்கு,
புத்தூர்.

(C-3089)

தகவல்: குடும்பத்தினர்
077 780 5394



## வீடொன்றிற்கு பெண் உதவியாளர் தேவை

- வயது 30 தொடக்கம் 40 வரை
- காலை 7.30 மணி முதல் மாலை 3 மணி வரை
- கிழமையில் 2 நாட்கள் விடுமுறை
- வார இறுதியில் சம்பளம் வழங்கப்படும்

நல்லூர், அரியாலை, இருபாலை, கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.

**077 616 1739**

(4438)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக்கும் கோட்டாவின் திட்டம் ரத்து! அரசாங்கம் தீர்மானம்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் ஆட்சி காலத்தில் தொடங்கப்பட்ட 671 மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகளாக மேம்படுத்தும் திட்டத்தை ரத்து செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறித்த திட்டத்திற்காக, ஒவ்வொரு பாடசாலைக்கும் இரண்டு மில்லியன் ரூபாய் வீதம் ரூ. 134 மில்லியனுக்கும் அதிகமான தொகை வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த நிதியினால், பாடசாலையின் புதிய பெயர்ப்பலகையைத் தயாரிக்கவும், அவசரப் புனரமைப்புப் பணிகளுக்கு அவற்றைப் பயன்படுத்தவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அறிவுறுத்தல்களின்படி, சம்பந்தப்பட்ட பாடசாலைகள் விரைவாக தேசியப் பாடசாலைகளாக பெயர்ப்பலகையைத் தயாரித்தன. அதற்காக ரூ. 500,000 மற்றும் அதற்கு மேற்பட்ட தொகையைச் செலவிட்டுள்ளன.

இதன் படி, இவ்வாறு மாற்றப்பட்ட அனைத்து பாடசாலைகளின் பெயர்ப்பலகைகளையும் அகற்றுமாறு தற்போதைய அரசாங்கம் அறிவித்துள்ளது.

அத்தோடு, தேசிய பாடசாலை பெயர், அதனுடன் தொடர்புடைய கடிதத் தலைப்புகள் மற்றும் முத்திரைகள் போன்றவற்றை நீக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தொடர்புடைய பாடசாலைகள் மீண்டும் பழைய பெயரில் புதிய கடிதத் தலைப்புகள், முத்திரைகள் போன்றவற்றைத் தயாரிக்க வேண்டும்.

கோட்டாபய அரசாங்கத்தினால் தேசிய பாடசாலைகளின் எண்ணிக்கையை 329,000 ஆக உயர்த்துவதற்காக இந்தத் திட்டம் தொடங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கொழும்பில் கார் மீது முறிந்து விழுந்த மரம்



(கொழும்பு)

கொழும்பு சிட்டி சென்டர் வர்த்தக வளாகத்திற்கு அருகில் வீதியில் பயணித்த கார் மீது பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

மரம் முறிந்து விழுந்ததால் காரின் முன் பகுதியில் சேதம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சீரற்ற வானிலை காரணமாக பல்வேறு பிரதேசங்களில் மரங்கள் முறிந்து விழுவதால் வாகனங்களை ஓட்டும் சாரதிகள் மிகவும் கவனமாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (நி-8)

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இந்த மாதம் சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, 2025 மே 01 முதல் 28 வரை இலங்கைக்கு 120,120 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர்.

கடந்த வருடம் மே மாதத்துடன் ஒப்பிடும்போது, சுற்றுலா பயணிகளின் வருகையில் 7.1% பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 42,899 இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இதேவேளை ஐக்கிய இராச்சியம் (8,382), சீனா (7,965) ஜேர்மனி, பங்களாதேஷ் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்தும் அதிகமான சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை -தம்பசிட்டி அருள் மிகு ஸ்ரீ மஹாமாரி அம்பாள் (பண்டாரி அம்மன்) ஆலய புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகா கும்பாபிஷேக பெருவிழா எதிர் வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெற உள்ளது.

வாமதேவ சிவாச்சாரியார் சிவஸ்ரீ சபா.பாஸ்கரக்குருக்கள் தலைமையில் இடம்பெறும் கும்பாபிஷேக பெருவிழாவை முன்னிட்டு எதிர் வரும் 5 ஆம் திகதி வியாழக் கிழமை அதிகாலை 5.15 மணி முதல் கர்மாரம்பம் இடம்பெற்று 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணிவரை எண்ணெய் காப்பும் இடம்பெற உள்ளது. தொடர்ந்து மறுநாள் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6.23- 8.30 மணி வரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெற உள்ளது. கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து மண்டலாபிஷேகமும் இடம்பெற உள்ளது. (நி-3-60)

# கே.சி.சி.சி வெற்றிக்கிண்ண இறுதிப் போட்டிகள் இன்று

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் மற்றும் விளையாட்டுக் கழகம் என்பன இணைந்து நடத்தும் 32 ஆவது கே.சி.சி.சி வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி தொடரில் 25 கழக அணிகள் பங்குபற்றியமையுடன் அரை இறுதிப் போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி மற்றும் பற்றீசியன்ஸ் அணி ஆகிய இரு அணிகளும் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (நி-3-8)

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் கைது



(அராலி)

நீண்டகாலமாக வீட்டில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் - ஊரெழு பகுதியில் 40 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் வாக்குமூலங்களுக்கு அமைவாகச் சுதுமலைப் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

மானிப்பாய் - சுதுமலை பிரதேசத்தில் நீண்ட நாட்களாக வீட்டின் சமையல் அறையில் கசிப்பு உற்பத்தி செய்து வந்த 36 வயதுடையே ஆணொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸாரும் கோப்பாய் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து இந்த நபரைக் கைது செய்துள்ளார்கள்.

இதன்போது 600 லீற்றர் கோடா, 60 லீற்றர் கசிப்பு, உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் காஸ் சிலிண்டர் என்பன கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. சந்தேகநபர் சான்றுப் பொருட்களுடன் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (நி-8-30-104)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 250 | 450 | 320 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 350 | 400 | 400 |
| தக்காளி | 700 | 750 | 800 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 280 | 240 |
| கோவா | 450 | 500 | 550 | 350 | 500 |
| கரட் | 800 | 850 | 800 | 700 | 900 |
| பூசணி | 160 | 200 | 150 | 170 | 200 |
| புடோல் | 150 | 200 | 200 | 220 | 250 |
| வாழைக்காய் | 100 | 120 | 100 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 100-350 | 250 | 280 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 140 | 120 | 110 | 150 |
| பாகற்காய் | 600 | 800 | 700 | 550 | 800 |
| வெண்டைக்காய் | 200 | 150 | 200 | 100-250 | 400 |
| கருணைக் கிழங்கு | 160 | 350 | 200 | 200 | 400 |
| பயற்றங்காய் | 200 | 200 | 100 | 300 | 200 |
| லீக்ஸ் | 350 | 360 | 350 | 250 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 450 | 500 | 600 |
| கறிமிளகாய் | 650 | 700 | 400 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 900 | 1000 | 1000 | 1200 |
| போஞ்சி | 400 | 550 | 550 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | 200 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 100-160 | 150 | 100 | 120 |
| தேசிக்காய் | 350 | 250 | 400 | 250 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 300 | 150 | 100-200 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 700 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 800 | 600 | 600 | -- | 800 |
| முள்ளங்கி | 150 | 200 | 200 | 150 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 60 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | -- | -- | -- | -- | -- |

# இராசிபலன்

01.06.2025
வைகாசி 18, ஞாயிற்றுக்கிழமை
சஷ்டி பின்னிரவு 1.11 மணிவரை

ஆயிலியம் பின்னிரவு 2.33 மணிவரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை
சஷ்டி விரதம்

சந்திராஷ்டமம்-பூராடம்

வளவன்

**மேஷம்**: நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, சுப செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்**: ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலன் கிடைக்கும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள்.

**துலாம்**: ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மகரம்**: உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து பேசுவார்கள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், செய்தொழில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்**: குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், அரசு வழியில் அனுகூலமுண்டு, நம்பி வந்தவர்களுக்கு நன்மைகள் செய்து மகிழும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்**: திடீரென கேட்கும் செய்திகளால் திகைப்படையலாம், வழிபாட்டில் ஆர்வம் காண வேண்டிய நாள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள்.

**விருச்சிகம்**: வருமானம் எதிர்பார்த்தபடி வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறும் வாய்ப்புண்டு.

**கும்பம்**: ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, வாழ்க்கைத்தரம் உயர வழிவகை செய்வீர்கள், சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**மிதுனம்**: இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், உறவினர் வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.

**கன்னி**: திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிப்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு**: திட்டமிட்ட காரியங்களில் சிறுதடை விவாதங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உளைச்சல்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


**மீனம்**: வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

ஆயிரம் உபதேசங்களை விட ஒரு அனுபவம் நல்ல பாடம் கற்பிக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**“பாராளுமன்றத் தேர்தலில் வீழ்ந்த அடி “பிட்டுக்கு மண் சுமந்த சிவனின் முதுகில் வீழ்ந்த அடி போல்” தமிழ்க் கட்சிகளுக்கு உறைத்ததன் விளைவே, நாம் ஒற்றுமைப்பட வேண்டும் என்ற சிந்தனை எழுந்தது என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.”**

# கொள்கை அரசியலை



# குழிதோண்டிப் புதைத்துவிட்டு...

அபிமன்யு

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் தமிழ்த் தேசியக் கட்சிகள் அழிவுப் பாதையில் இருந்து மீட்சி பெறுவதை உணர்த்தியிருக்கிறது.

ஆயினும் ஆட்சி அமைப்பதில் மீண்டும் அதே புடுங்குப்பாடு நிலை இருப்பதை அவதானிக்கும் போது “உங்களை ஒரு பெரியார் அல்ல, ஓராயிரம் பெரியார் வந்தாலும் திருத்த முடியாது” என்ற சினிமா வசனமே நினைவுக்கு வருகிறது.

பாராளுமன்ற தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் எழுச்சியை அடுத்து ஒற்றுமைப் படுவோம் என்ற உயரிய சிந்தனை எம் தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் ஊற்றெடுத்தது. “எமது வாக்கு எமக்கே” என்ற புதுப்பாணியில் பிரசாரங்களைத் தொடங்கினர்.

முற்றும் முழுதாக தென்பகுதி கட்சிகளைத் தவிர்த்து தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வாக்களிக்கக் கோரியமை தமிழ் மக்களுக்கு பிடித்துவிடவே, மீண்டும் தமிழ்த் தேசியக் கட்சிகளை ஆதரித்தனர் தமிழ் மக்கள்.

தமிழினத்துக்கு உண்மையான, நேர்மையான, அப்பளுக்கற்ற ஒரு தலைவன் தேவை. ஆனாலும் அந்த இடம் வெற்றிடமாகவே இருக்கிறது.

தமிழினம் இந்த வேதனையை அனுபவித்திருக்கின்றனராயினும் எம் தமிழ்த் தேசியக்கட்சித் தலைவர்களுக்கோ, உறுப்பினர்களுக்கோ இந்தக் கவலை இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் ஏதோ மாய உலகில் வாழ்வதாய் உணர்கின்றனர் போலும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கட்சிகளை தமிழ் மக்கள் ஆதரித்ததை தமது சொந்த வெற்றியாகக் கருதுவது அவர்களின் பேச்சுக்களில் நன்கு புலப்படுகிறது.

தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கவோ! அவர்களின் பூர்வீக நிலங்களை பெற்றுக் கொடுக்கவோ! முனைப்புக் காட்டாமல் தமது அரசியல் எதிர்காலத்துக்கான நகர்வுகளை மீண்டும் தமிழ்த் தலைவர்கள் மேற்கொள்வராயின் அதன் விளைவை அடுத்த தேர்தலில் உணர்ந்து கொள்வார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் நிறைவு பெற்றுவிட்டன. உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதில் பெரும் இழுபறி நிலை இருந்து கொண்டே இருக்கின்றது.

ஆளும் தேசிய மக்கள் சக்தி வடக்கில் உள்ளூராட்சிமன்றங்களை முழுமையாக கைப்பற்றாமல் போனதாயினும் அவர்கள் ஏதேனும் ஒரு கட்சியுடன் கூட்டுச் சேர்ந்தால் ஆட்சி அமைக்கும் நிலை ஏற்பட்டுவிடும். இந்த நேரத்தில் தமிழ்த் தேசியக்கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்கக் கோரி தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்திருக்கின்றது.

இங்குதான் மீண்டும் சுயநல அரசியல் வேலை செய்யத் தொடங்கியுள்ளது. நாங்கள் ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு அளிக்கிறோம். எமக்கு தவிசாளர் பதவியைத் தாருங்கள் அல்லது உப தவிசாளர் பதவியைத் தாருங்கள் என்ற கோரிக்கைகள் தமிழ்த் தேசியக் கட்சிகளை பிய்த்துப் பிடுங்கத் தொடங்கி விட்டது.

தவிர, கட்சியின் நியமன உறுப்பினர் (போனஸ்) தெரிவுகளில் குளறுபடிகள் இருப்பதாகவும் தேர்தல் நடைமுறைகளைப் பின்பற்றாமல் குறித்த கட்சிகள் தன்னிச்சையான முடிவுகளில் அந்தத் தெரிவுகளை மேற்கொள்வதாகவும் பலர் குமுறுகின்றனர்

தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட வேண்டும் என தமிழினம் விரும்புகிறது. அந்த விருப்பை தமிழ்த் தேசியக் கட்சிகள் உண்மைப்[illegible] வேண்டும். மாறாக அது தமது சுயநல அரசியல் சார்ந்த கூட்டாக இருந்தால் அதைத் தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்கமாட்டார்கள்.

நிலை இவ்வாறு இருக்கையில் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பான பேச்சுக்கள் அடிபடத் தொடங்கி விட்டன.

சமூக வலைத்தளங்களில் சக கட்சி ஆதரவாளர்களுக்குள்ளும் ஏனைய கட்சி ஆதரவாளர்களுக்குள்ளும் கடும் மோதல் நடந்து கொண்டிருக்கின்றது.

தங்கள் ஆதரவாளரே முதலமைச்சர் வேட்பாளர் என ஒரு சாரரும். அவரை எதிர்க்கும் வேறொரு சாராருமாக மோதல் உச்சம் பெற்றிருக்கும் நிலையில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில் கூறிய கருத்து அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

ஏனைய கட்சிகளின் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளர் தெரிவைப் பார்க்கும் போது, நாம் முதலமைச்சர் வேட்பாளராக ஒரு தும்புத்தடியை நிறுத்தலாம் என நினைக்கின்றோம் என அவர் கூறியிருக்கின்றார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், முதலமைச்சர் வேட்பாளர் தொடர்பில், கேட்கப்பட்ட கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் [illegible] நிச்சயம் போட்டியிடுவோம். ஏனைய கட்சிகளின் முதலமைச்சர் வேட்பாளர் தெரிவைப் பார்க்கும் போது நாம் ஒரு தும்புத்தடியை முதலமைச்சராக போட்டியிட வைக்கலாம் என்றார்.

அவரின் மேற்குறித்த கருத்திற்கு, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவைக் கட்சியின் பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் பதிலடி கொடுத்திருக்கிறார்.

அதாவது, முதலமைச்சர் தும்புத்தடி என்றால், பாராளுமன்ற உறுப்பினர்கள் விளக்குமாறுகளா? என்றவாறு அவர் தனது கருத்தைப் பதிவிட்டிருக்கிறார்.

எம் தமிழ்த் தேசியக்கட்சிகளின் நிலையினைச் சுட்டிக்காட்டுவதற்கு இது ஒரு நல்ல உதாரணம்.

ஒற்றுமை என்பது வெறும் பேச்சளவிலும் அறிக்கை வடிவிலுமே தவிர, மனரீதியாகவும் தமிழ் இனத்தின் உரிமைகளை வென்றெடுக்கும் எண்ணத்துடனானதும் அல்ல என்பதே மெய்.

கொள்கை என்பது எமது இனத்தின் விடுதலை சார்ந்ததாய் இருக்க வேண்டுமே தவிர, எதிர்ப்பு அரசியல் ஒருநாளும் கொள்கை ஆகாது.

இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமல் மீண்டும் மீண்டும் அதே சுயநல அரசியல் என்ற குட்டையில் ஊறும் மட்டைகளாய் யார் இருந்தாலும் அவர்களை தமிழ் மக்கள் ஒருநாளும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் அதிகாரி சச்சிதானந்த குருக்கள் பிரபாகர சர்மா அவர்கள் விபத்துச் சம்பவம் ஒன்றில் மரணமடைந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைகின்றோம்.

ஆற்றல் மிகுந்த பிரபாகரன்; வடபுலத்து மக்களையும் இந்தியத்துணைத் தூதரகத்தையும் இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர்.

இந்தியாவின் உதவி தமிழ் மக்களுக்குக் கிடைப்பதில் அவர் ஆற்றிய பணியை ஒருபோதும் மறந்து விட முடியாது.

அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரது மனைவி, மகன், மச்சான் ஆகியோர் பூரண சுகமடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம் எனக் கூற, ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து நின்று இறை பிரார்த்தனை செய்து அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அந்நேரம் வாத்தியார் வைத்திலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார்.

இதனை அவதானித்த சாத்திரியார், என்ன வாத்தியார் கடும் யோசனையில இருக்கிறியள்.என்ன சங்கதி.

**வாத்தியார்:-** சொந்த யோசனை ஒண்டும் கிடையாது. எல்லாம் எங்கட நல்லை ஆதீனம் பற்றிய யோசனை தான்.

**சாத்திரியார்:-** ஏன் வாத்தியார்? நல்லை ஆதீனம் பற்றி என்ன யோசனை.



சச்சிதானந்தக் குருக்கள் பிரபாகர சர்மா

**வாத்தியார்:-** அண்மையில காஞ்சிகாம கோடி பீடத்தின் இளைய மடாதிபதிக்கு பட்டாபிஷேகம் நடைபெற்றது. அந்த நிகழ்வில எத்தனையோ ஆயிரம் பேர் கலந்து கொண்டனர்.

தமிழகத்தின் ஆளுநர். ஆர்.என்.ரவியும் அதில் கலந்து கொண்டார். காஞ்சிகாமகோடி பீடாதிபதி விஜேந்திர சுவாமிகள் இளைய மடாதிபதிக்கு அபிஷேகம் செய்து பட்டாபிஷேகத்தை நடத்தி வைத்தார்.


ஆனால் எங்கட நல்லை ஆதீன சுவாமிகள் தேகவியோகம் அடைந்த பின்பு, மூன்றாவது குரு மகா சந்நிதானத்தை நியமிக்க முடியவில்லை.

ஆதீனப் பணியைச் செய்வதற்கு துறவு பூண ஒருத்தரும் தயாராக இல்லை.

இதால எங்கட சைவ சமயத்தின் தலைமைப்பீடமாக விளங்கக்கூடிய நல்லை ஆதீனம் குரு முதல்வர் இல்லாமல் இருக்குது.இதை நினைக்க கவலையும் யோசனையும் தானே வரும்.

**சாத்திரியார்:-** ஏன் வாத்தியார் நல்லை ஆதீனத்திற்குத் துறவிகள் தேவை எண்டு விளம்பரப் படுத்தினால் என்ன?

**வாத்தியார்:-** சின்ன வயதில இருந்தே துறவிக்கான பயிற்சிகள் வழங்கப்பட வேணும். அதால தான் நான் அடிக்கடி சொல்வது, எங்களுக்கு ஒரு துறவற சபை தேவை எண்டு.



## மின்மானி வாசிப்பின் போது ஒரு சிறு பட்டியலையேனும் வழங்கினால் என்ன

உண்மையில எங்கட துறவற சபை என்பது நல்லை ஆதீனமாகத்தான் இருக்க முடியும்.

**சாத்திரியார்:-** எங்கட நல்லை ஆதீனத்திற்கு ஒரு துறவி எண்டு எடுக்காமல், துறவைப் பூரணமாக விரும்பி ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களை எடுத்து அவர்களை நல்லை ஆதீனத்தில் தங்க வைத்து பயிற்சி கொடுக்க வேணும்.

தேவையென்றால், ஒரு சிலரைத் தமிழகத்தில் உள்ள ஆதீனங்களுக்கு அனுப்பி அங்கு துறவறப் பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கும் வழி செய்யலாம்.

**சிறாப்பர்:-** சாத்திரியார் சொல்லுவது சரி போலதான் தெரியுது. நல்லை ஆதீனத்தில தங்கியிருந்து துறவற வாழ்வை மேற்கொள்வதற்கு ஆன்மீக நாட்டமும் துறைவு சார்ந்த மன நிலையும் உள்ளவர்களை நல்லை ஆதீன ஆளுநர் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு ஒரு வேண்டுகோளை இந்த இடத்தில விடுப்பம்.

எத்தனையோ இளைஞர்கள் ஆன்மீக நாட்டத்தோட இருக்கினம். அவர்கள் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

**பண்டிதர்:-** நல்லை ஆதீனம் எங்கட சைவ சமயத் தலைமை நிறுவனம். அரசியல் தலைவர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள், இதர சமயத் தலைவர்கள் இங்கு வரும் போது, நல்லை ஆதீனத்திற்கு வருவதன் மூலம் சைவ சமயத் தலைவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியதான பதிவுகள் ஏற்படும். ஆகையால எப்பாடுபட்டும் எங்கட நல்லை ஆதீனத்தைக் காப்பாற்ற வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது. நிசப்தத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

**விதானையார்:-** இப்ப இலங்கை மின்சார சபை மின்மானி வாசிப்புத் தொடர்பாக எந்தவித பில்லுகளும் தருவதில்லை.

**மூப்பர்:-** கையடக்கத் தொலைபேசி மூலமாகத் தானே இப்ப அவர்கள் பில் பட்டியலை அறிவிக்கினம்.

**விதானையார்:-** எல்லா வீடுகளிலும் வசதி கொண்ட கையடக்கத் தொலைபேசி இருப்பதற்கான வாய்ப்பு இல்லை.

அதைவிட முதியவர்கள் இருக்கின்ற வீடுகள் என்றால், நவீன கையடக்கத் தொலைபேசியை இயக்குவது அவர்களுக்குக் கடினமாக இருக்கும்.

ஆகையால மின்மானியை வாசிக்கும் போது, ஒரு சிறிய பில் துண்டாவது மின்சார சபை, உரியவர்களுக்கு வழங்க வேண்டும். துண்டற எழுத்து மூல பில் பட்டியல் இல்லை என்றால், அதால பலரும் கஷ்டப்படுகிற கட்டம் உண்டு.

அதேநேரம் மின்மானி வாசிப்பையும் ஒவ்வொரு மாதமும் ஒழுங்குமுறையாக நடைமுறைப்படுத்தும் போது, அது மின் பாவனையாளர்களுக்கு மிகுந்த சௌகரியமாக இருக்கும்.

ஆகையால இது பற்றி எங்கட வடமாகாணத்தின்ர மின்சார சபை நடவடிக்கை எடுக்கும் எண்டு நம்பலாம்.

இவ்வாறு விதானையார் கூறியதும் ஆலடி அமைதியாகியது. அமைதியைக் குலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** அது சரி 2020 ஆம் ஆண்டு கல்வியியலாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரி 2025 ஆம் ஆண்டில நியமனம் வழங்கப்பட்டிருக்குது. இதில பல அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வியியலாளர் பதவிக்கு தெரிவாகியிருக்கினம்.

**சிறாப்பர்:-** அப்ப இனி அதிபர்களின்ர பொறுப்புக்களை ஆசிரியர்களிட்ட கொடுக்கிறதாக நிலைமை இருந்தால், வட மாகாணக் கல்வி அமைச்சின்ர கொள்கையும் பாடசாலைகளுக்கு அதிபர்களைத்தான் நியமிக்க வேண்டும் என்ற ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கையும் பிசுபிசுக்கப் போகுது.

**வாத்தியார்:-** சரி... சரி... நாங்கள் சபிக்கப்பட்ட ஓர் இனம். ஆகையால எங்களுக்கு எல்லாம் தலைகீழாகத் தான் நடக்கும். என்ன செய்யிறது நாங்கள் செய்த ஊழ்வினையை அனுபவித்துத் தானே ஆக வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உள்ளூராட்சி மன்ற கூட்டணி இழுபறியில் வீடு -சங்கு -சைக்கிள் ஏன்?






நகைச்சுவையும் அதில் நல்ல அர்த்தமும் இருப்பதுபோலஒருவிடயம்கூறுங்களேன்?

**நான் தோட்ட வேலை செய்பவன். சம்பளம் கொண்டு வந்தால் அம்மா சிரிக்கிறாள். கொண்டு வராவிட்டால் முறைக்கிறாள். ஏன் வியாசரே?**

தவராஜன்-கொற்றாவத்தை

இல்லத்து அரசியிடம் பணம் கொடுத்தால் தானே அரிசி சோறாகி பொங்கும்.

இல்லையேல் அடுப்பில் பூனை படுக்கும். பானை சிரிக்கும்.

**டோனி தனது ஓய்வு குறித்து என்ன கூறுகிறார் வியாசரே?**

பிரணாப்-பருத்தித்துறை

விளையாட்டு வீரர்களின் ஓய்வு என்பது நல்ல நிலையில் இருக்கும் பொழுது எடுத்துக் கொள்வதே சிறந்தது.

அதைத் தவிர்த்து அவர் அணியில் ஏன் என்ற சிந்தனை வரும் பொழுது எடுக்கும் ஓய்வு அவமதிக்கும் ஓய்வாகவே இருக்கும்.

டோனி மிகச்சிறந்த வீரர். அவரின் வயது, உடல்நிலை என்பவற்றைகருத்திற் கொண்டு அவர் தானாக ஓய்வு பெறுவது தான் சிறந்தது.

டோனி புராணம் பாடிய பலர், ஏன் டோனி அணியில் இருக்கிறார் என விமர்சனம் செய்யத் தொடங்கிவிட்டார்கள்.

டோனி மிகச்சிறந்த தலைமைத்துவ பண்பு உள்ளவர். அணியில் தனது இடம் எது என்பதை உணராதவர் இல்லை. ஆதலால் அவர் நல்ல முடிவை எடுத்தாக வேண்டும்.

**ஊழல்வாதிகளுக்கு வயிற்றில் புளி கரையுமே?**

ரிதுஷ்- வதிரி

ஊழல் புரிந்த மகிந்தானந்த அளுத்கமகே, நளின் பெர்னாண்டோ ஆகியோருக்கு நீதிமன்றம் வழங்கிய கடூழியச் சிறைத் தண்டனை செய்தியைப் பார்க்கும் போது ஒரு கதை ஞாபகம் வந்தது.

ஒரு அரசன் தான் இதுவரை உண்ணாத பழத்தைக் கொண்டு வருபவர்களுக்கு பணப்பரிசு தருவதாயும் ஒருவேளை அவர் கொண்டு வரும் பழம் தான் உண்ட பழம் என்றால் அவரின் வாய்க்குள் அந்தப் பழத்தை வைத்து திணிக்கப்படும் என்றான்.

அரண்மனை வாயிலில் வரிசையில் மக்கள் கூட்டம் பழங்களுடன் நிற்கின்றனர். ஒருவர் அன்னாசிப்பழம் கொண்டு சென்றிருந்தார். அவருக்கு வாயில் வைத்துப் பழத்தைத் திணித்ததில் வாய் கிழிந்து இரத்தம் பீறிட்டது. ஆனாலும் அவர் சிரித்துக் கொண்டே கூறினார்.

அன்னாசிப் பழம் கொண்டு போன எனக்கே இந்தக் கதியென்றால் பின்னுக்கு பலர் பலாப் பழத்தோடு நிற்கின்றார்கள் என்று.

**உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முடிவுகள் மூலம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு மக்கள் கூறுவது என்ன?**

சாயிசெல்வம்-பருத்தித்துறை

அன்பானவர்களே! உங்களிடம் எங்களுக்கு எந்தத் தனிப்பட்ட விருப்பு வெறுப்பும் இல்லை.ஆயினும் நீங்கள் தேர்தலில் வெல்லுவதற்கு முன்னரும் பின்னரும் பேசும் பேச்சுக்கள் நடந்து கொள்ளும் விதங்கள் எமக்குப் பிடிக்கவில்லை.உங்களிடம் தமிழ் மக்களின் உரிமை மீட்பு என்ற உயரிய சிந்தனை இருக்கும் என்று நாங்கள் கருதினோம்.

ஆனால் நீங்களோ சுய நல அரசியல் போர்வையை போர்த்திக் கொண்டு தன் பக்கமே சுடும் துரோகிகளாகவே இருக்கின்றீர்கள். பாராளுமன்றத் தேர்தலில் பயம் காட்டி உள்ளூராட்சி சபைத் தேர்தலில் உம்மை ஆதரித்தோம். இதன் பின்பும் நீங்கள் திருந்தாமல் செயற்பட்டால் தற்காலிக தூக்கி எறிதல் நிரந்தரமாகிவிடும் கவனம்.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
0076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS, Whats App செய்யுங்கள்

**நகைச்சுவையும் அதில் நல்ல அர்த்தமும் இருப்பதுபோலஒருவிடயம்கூறுங்களேன்?**

தர்மா- சாவகச்சேரி

ஒருவர் மன நல வைத்தியரிடம் சென்று எனக்கு மகிழ்வு இல்லை. எந்த நகைச்சுவையைப் பார்த்தாலும் சிரிப்பே வருவதில்லை எனக்கு ஏதாவது மருந்து தரும் படி கூறினார்.

அதற்கு வைத்தியர் கூறினார் மூன்றாவது தெருவில் ஒரு மிருகக்காட்சிச்சாலை இருக்கிறது.அங்கு ஒரு கோமாளி. மக்களை நன்றாக சிரிக்க வைக்கிறார். நானே பலமுறை அங்கு போய் மகிழ்ச்சியாய் இருந்திருக்கிறேன்.

நீயும் அங்கே போ என்றார்.

அதற்கு அவர் கூறினார். டாக்டர் அந்தக் கோமாளி நானே தான் என்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உள்ளூராட்சி மன்ற கூட்டணி இழுபறியில் வீடு -சங்கு -சைக்கிள். ஏன்?**

ஜெயகுமார்- முகமாலை

மழை பெய்வது பொது நலம் அதில் குடை பிடிப்பது சுய நலம் என்றொரு சொல்லாடல் உண்டு.

இந்தச் சந்திப்புக்களையும் அது தோல்வியில் முடிந்தது தொடர்பான செய்தியைப் பார்க்கும் போதும் மேற்குறித்த சொல்லாடலே நினைவுக்கு வருகிறது.

மக்களுக்காக,அவர்களின் நலனுக்காக நாம் செயற்படுகிறோம் என்று கூறுபவர்கள் ஏன் ஒன்று சேர முடியவில்லை என்பது தான் புரியாத புதிராக இருக்கிறது.

சந்திப்புக்கள் தொடர்பில் உங்களுக்கு வாக்களித்த மக்களில் ஒருவரிடம் மேனும் அவர்கள் விருப்பு வெறுப்பு என்ன வென்று கேட்டீர்களா?

உங்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும். நீங்கள் உங்கள் தனிப்பட்ட அரசியல் நலன் சார்ந்து முடிவெடுப்பீர்கள். இதில் ஏதும் நியாயம் இருக்கிறதா சொல்லுங்கள்.

**கனடாவில் உள்ள தமிழின அழிப்பு நினைவுத்தூபி சேதப்படுத்தியமை தொடர்பில் வியாசரின் கருத்து என்ன?**

தமிழ்- யாழ்ப்பாணம்

கனடாவில் எழுப்பப்பட்ட தமிழின அழிப்பு நினைவாலயத்திற்கு இலங்கை அரசு கடுமையாக எதிர்ப்புத் தெரிவித்திருந்தது.

இந்த நேரத்தில் அத்தூபி சேதமாக்கப்பட்டிருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கின்றதாயினும் இது ஏதும் திட்டமிட்ட சதியாக இருக்கலாம் என்ற கோணத்தில் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழின அழிப்புக்குத் தூபி; இலங்கை ஆட்சியாளர்கள் செய்ய வேண்டிய செயல். கனடிய அரசு செய்திருக்கிறது.

**அபிவிருத்தி குழுக் கூட்டங்கள் பிரதேச அபிவிருத்திக்கானதாய் அமைகின்றனவா எனும் சந்தேகம் எழுகிறதே?**

செந்தூரன்- மாதகல்

நேற்று முன்தினம் நடந்த யாழ்.மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விசேட தேவையுடையவர் ஒருவர் எழுந்து மிகவும் காட்டமாகப் பேசியிருந்தது பலராலும் பாராட்டப்பட்டிருந்தது.

அதாவது, அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் உங்கள் பேச்சுத் திறனையும் அரசியல் அந்தஸ்தையும் காட்டுவதற்காக அபிவிருத்திக் குழுக் கூட்டத்தை நடத்துகிறீர்கள் என்றால் நங்களை (பொது அமைப்புகள்) ஏன் அழைக்கின்றீர்கள்.

நாங்கள் தேநீரும் வடையும் சாப்பிடவா இங்கு வந்தோம் எனப் பேசியிருந்தார்.

உண்மையும் அது தான். அங்கு பலரும் பகல் நித்திரை கொள்வதே அதிகம்.


# எது எனக்கு இன்பம் நல்கும்!



புது மலரான அவள், இதழ்
உதிர்ந்த பூவின் காம்பான போதும்
நறுமணக் கருங் கூந்தல்
நரைந்து வெள்ளைக் காடாகிய போதும்
சதுராடும் கால், நடை தளர்ந்து
அவள் தள்ளாடி விழும் போதும்
குளிர் மதியென வர்ணித்த முகம்
குழி விழுந்து வறளான போதும்
மார்புக்கச்சற நிமிர்ந்த கொங்கை
வாடிக் கயிறாகத் திரிந்த போதும்
எது எனக்கு இன்பம் நல்கும்
என்னருகில் இருக்கின்றாள் என்பதொன்றே.

பிரமன் - கொக்குவில் மேற்கு.

# ஏமாற்றாதே...! ஏமாறாதே...!




தேர்தல் வந்தது...! - மக்கள்
தேர்வு நடந்தது
உள்ளூர் ஆட்சி
வாக்குக் கொடுத்தனர்
வாக்குக் கேட்டனர் - மக்கள்
வாக்குப் போட்டனர்
தேறியோர் தேரேற - துடித்தனர்
தேரிலமர பெரும்பான்மை யிலார்
கூட்டு சேருவது...!
பங்கு பிரிப்பது
உடன்பாடு எட்டிலார்
ஒற்றுமை யிலாது
ஒன்றிணையாது
இன மத பேதத்தால் - மக்களை
கூறு போட்டு
ஆட்சி சுகம் கண்டவர்கள்
இன்று
ஆட்சி அமைக்க முடியாது
கந்தறுந்து நிற்கின்றார்
"ஒற்றுமை யிலா ஆள்வோரே...! - நீங்கள்
ஒன்று பட்டு வாருங்கள் - நாம்
பெரும் பான்மை பலம் தருவோம்"
"மக்களே மகோன்னதமானவர்கள்"
அறிஞன் கூறிய கூற்று - என்
காதில் விழுந்தது.

சாந்தையூரிவன்
தி.ராம்குமார்

# சாகச விபத்துக்கள்!

இடி மின்னல் புயலாய்
வெடி அதிரச் சாவுகள்
ஆட்லறி துளைகளின்
அகோரப் பலிகள்
கண்முன்னே கண்ட காட்சி
கனவாகிப் போகமுன்னே
போருக்குள்ளிருந்து
மீண்டெழுந்த எம்மினத்தில்
சாகசத்தின் உச்சத்தால்
சாவுகள் வருவதேன்?
வீரம், விஞ்ஞானம் அதற்குமேல்
வான்புகழ் கொண்ட பண்போடு
வரித்த கொள்கையில் விசித்திர
வரலாறு
படைத்தது எம்மினம்.



விபத்து என்ற வரையறைக்குள்
விழுந்து கிடத்தல் வேண்டாம்
சிரித்து மகிழும் உறவுகளை
சோகத்தில் ஆழ்த்திட வேண்டாம்
இயற்கை மரணங்கள்
எமைத் தாக்கும் காலமதில்
செயற்கை சாவுதனை
சேகரிக்கும் கொடுமையிது
கொடுத்த விலை போதும் - தோழனே!
கிடைத்த காலம் வாழ்வோம்.


சவாரி செய்திடும் சாகசம் நிறுத்து.
சிறுவர் முதியோர் வீதியைக்
கடப்பர் பார்வை இழந்தவர்
பாதையில் தவிப்பர்
பொறுமையில்லாப் பயணங்கள்
தவிர்த்து பொன்னான உயிர்தனை
கண்ணாக காப்போம்.

குகேந்திரன் விஜயலதா
ஆசிரியர்,
மு/அரசினர் தமிழ் கலவன்
பாடசாலை,
முத்துஐயன் கட்டு.

# அன்புடன் வாழ

அன்பினை விதைக்க
ஆயுத வேலிகள் வேண்டாம்
போதைமிகு வார்த்தைகள்
வேதனை தரும்
போதனையிலும்
சாதனை உண்டு
வன்முறை இல்லா
இன்புறு சொல்லால்
பண்புறு வாழ்வதனை
வண்ண முற வைப்போம்
இனங்கள்
இன்புற்று வாழ
பண்புறு எண்ணங்களால்
பயணிப்போம்
நியாயங்களை
நிராகரித்தாலே
நீதிக்கு சோதனை!
அன்பிற்க்கு வேதனை
அன்பினை
அங்கீகரிப்போம்
அன்புடன் வாழ.

கலாபூஷணம் - பரந்தாமன்
வவுனியா.



## பொக்கிஷக் கவிதை

1987 வெளிவந்த "மல்லிகை கவிதைகள்" நூலிலிருந்து...

# களனி நதியோரக் கனவுகளும் ..................... பாலத்துறைப் பாலத்தடியும்

மேமன்கவி



மஞ்சள் வெயில் பர்தாவில் அமைதி தவழ
குமையும் கழிவுகளைத் தானும் சுமக்க,
மூங்கில் கலங்களில் தேய்வுகள் வாங்கி
சிறுதூண்டில் வீச்சில் தனிமீன்கள் சிக்க
சாக்கடைகளில் சங்கம் கலப் பாடு
களனி நதிவிழியில் சின்ன அலைக் கனவுகள்!

கள்குடித்த போதை அயர்ச்சியிலும் நீர்மூழ்கி,
மண் அள்ளிக் கரைசேர்த்து வந்த களைப்புத்
தந்த மயக்கங்களை ஈரமணல் கொங்கீறிட்
கற்பாரம் சுமையாகச் சுமந்து வரிசையாய்ச்
செல்லும் கரத்தைகள்
கிறிச்சிடும் அச்சாணிகளால்
கோரமாய்க் கலைக்க
தவறணை வாசல் கடலைக்காரிகள் விற்கும்
டேஸ்டில் குறைகண்ட ஆத்திரத்தில் சந்தி
அதிர, கழுவாத வார்த்தைகளை மந்தி மணம்
மேலோங்கிய நிலையில் சில உருவங்கள்
கழுவும் கோலத்தை, பாதையோரத்துப்
பைப்களில் ஓட்டை வாளிகள், கரள்பிடித்த
கோலைகளுடன் குளிக்கும் பல பருவங்கள்
ஒழுக்கம் மீறி ரசிக்கும் ரசிப்பை, தூசிக்கர
வீசி மறையும் லொறிகளின் டிரைவர்
கிளினர் வேடிக்கை பார்த்துப் போக, சேரிப்
பிஞ்சுகளுக்கு நீச்சல் குளமாகும்
களனி நதியோரத்துக் கரைகள்!

வாகனங்கள் சிந்திய ஒயிலை பாலத்துறைப்
பாலத்து தூண்களால் உள்வாங்கிச்
சலசலக்கும் சருகுகளோடு வானவில்
வட்டங்களை ஓட்டும் களனி நதியோரத்து
நீர் மடிப்புகள்!

## கவிதைக் கலசம்

அன்பு வாசகர்களே!
உங்கள் அபிமான
சங்குநாதத்தில் நீங்களும்
எழுதலாம்...
☑ அரசியல் ☑ இலக்கியம்
☑ கவிதை ☑ கட்டுரை
ஆக்கங்களை உங்கள் பெயர்,
முகவரி, தொலைபேசி இலக்கம்
என்பவற்றை குறிப்பிட்டு அனுப்பி
வையுங்கள்.
ஆசிரியர், வலம்புரி - சங்குநாதம்
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
E-mail : valampurii@yahoo.com
Whatsapp : 076 097 3126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் அரசியல்வாதிகளை அலையவிட்ட தமிழ் மக்கள்



குருசேத்திரம்
-விதுரன்

இரண்டாம் உலகப் போர் முடிவுற்ற பின்னர் நடந்த பிரிட்டிஷ் தேர்தலில் வின்சன் சேர்ச்சில் தோல்வியுற்றார்.

வின்சன் சேர்ச்சிலின் தேர்தல் தோல்வி உலகம் முழுமையையும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இரண்டாம் உலகப் போரில் நின்று பிடித்த வின்சன் சேர்ச்சில் தோல்வியுறுவதற்கு என்ன காரணம் என்பதே அன்றைய உலக அரசியலில் பேசு பொருளாயிற்று.

இந்த நேரத்தில் அது பற்றி பிரிட்டிஷ் பத்திரிகைகள் விமர்சனங்களை வெளியிட்டன. அதில் ஒரு பத்திரிகை இந்த உலகில் நன்றி கெட்டவர்கள் பிரிட்டிஷ் மக்கள் என்று சிலாபித்திருந்தது.

நாட்டின் பிரதமராக இருந்து இரண்டாம் உலகப் போரை வெற்றிகரமாக முடித்த வின்சன் சேர்ச்சிலை தேர்தலில் தோற்கடித்ததன் மூலம் பிரிட்டிஷ் மக்கள் நன்றி மறந்து விட்டார்கள் என்பது அந்தப் பத்திரிகையின் கருத்தாக இருந்தது.

அதேநேரம் பிரிட்டனில் இருந்து வெளிவரும் இன்னொரு பத்திரிகை, இந்த உலகில் மிகவும் புத்திசாலிகள் பிரிட்டிஷ் மக்கள் என விளாசித் தள்ளியது. தனது கருத்தை ஆதாரப்படுத்தும் வகையில்; வின்சன் சேர்ச்சிலை தோற்கடித்ததன் மூலம் பிரிட்டிஷ் மக்கள் தங்களை புத்திசாலிகள் என நிரூபித்துள்ளனர்.

ஆம், போர்வெறி கொண்ட வின்சன் சேர்ச்சிலை மீண்டும் பிரதமராக்கினால் அவர் மூன்றாம் உலகப் போரை நோக்கி நாட்டை நகர்த்துவார்.

இரண்டாம் உலகப்போரில் ஏற்பட்ட இழப்புக்கள், மனித அவலங்கள் போதுமானவை. போர் முடிவுற்ற வகையில் இனி உலக சமாதானமே தேவை.

ஆகையால் போர்க்குணம் கொண்ட வின்சன் சேர்ச்சிலை வீட்டுக்கு அனுப்பி விட்டு அமைதியை-சமாதானத்தை விரும்புகின்ற ஒருவரை பிரதமராக்குவது தான் ஏற்புடையது எனத் தீமானித்த பிரிட்டிஷ் மக்கள் உலகிலேயே புத்திசாலிகள் என அந்தப் பத்திரிகை கருத்துரைத்திருந்தது.

ஆம், இங்கு தான் நாம் தமிழ் மக்கள் பற்றி நோக்கும் போது எங்கள் தமிழ் மக்கள் மிகுந்த அரசியல் ஞானம் உடையவர்கள் என்று கூறுவது தான் பொருத்தமுடையது.

கடந்த காலப் பொதுத் தேர்தல்களின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தமிழ் மக்கள் ஆதரித்திருந்தனர்.

பின்னர் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் தன்னை ஒரு அரசியல் சர்வாதிகாரியாக கருதி கூட்டமைப்பை கருவறுத்த போது, சரி எல்லாக் கட்சிகளுடனும் சேர்ந்து தீமானங்களை எடுப்பது கடினம் எனக்கருதி இரா.சம்பந்தர் இலங்கைத் தமிழரசுக் கட்சியை முதன்மைப்படுத்துகிறார் என்ற எடுகோளின் அடிப்படையில் தமிழ் மக்கள் தமிழ் அரசுக் கட்சிக்கு தங்கள் வாக்குகளை வழங்கினர்.

தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றுக் கொண்ட தமிழரசுக் கட்சி தமிழ் மக்கள் பற்றி சிந்திக்கத் தவறியது. அதிலும் குறிப்பாக இரா.சம்பந்தர் விடுதலைப்புலிகள் மீது கொண்ட காழ்ப்புணர்வு காரணமாக மகிந்த ராஜபக்ஷ தரப்புடன் நெருங்கிக் கொண்டார். அதன் காரணமாக போர் க்குற்ற விசாரணைகள் மழுங்கடிக்கப்பட்டன.

தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள் தமிழர்களின் பலமாக மாறிய போது, இரா.சம்பந்தர் தமிழர்களின் அரசியல் தலைவராக இருந்த காரணத்தால், கைக்குக் கிட்டிய அந்த வாய்ப்பு வாய்க்குக் கிட்டாமல் போயிற்று.

இதற்கு முன்னதாக, வடக்கு மாகாண சபைத் தேர்தலில் ஒட்டுமொத்த தமிழ் மக்களும் தமது ஏகோபித்த ஆதரவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வழங்கியிருந்தனர்.

ஆனால் கட்சிக்குள் ஏற்பட்ட உள்ளக முரண்பாடுகள் வடக்கு மாகாண சபையால் எதுவும் செய்ய முடியாத நிலைமையை ஏற்படுத்தியிருந்தது.

அன்று வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்ட இரண்டு மூத்த அரசியல்வாதிகளால் எம் தமிழ் மக்களின் தலையில் மண் போடப்பட்டது.

அன்று தொட்ட அந்த சகுனித்தனங்கள் இன்னமும் முடிந்தபாடில்லை. இந்த இடத்தில் தான் தமிழ் மக்கள் நிதானமாகச் சிந்திக்கின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கணிசமான மக்கள் சஜித் பிரேமதாசவிற்கு வாக்களித்தனர்.

ஆயினும் அநுரகுமார திஸாநாயக்கவிற்கு சிங்கள மக்கள் வழங்கிய ஆதரவு தமிழ் மக்களை வியக்க வைத்தது.

ஓ! அடுத்த பொதுத் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவின் பலத்தை அதிகரிக்கச் செய்வதன் மூலம் தென்னிலங்கை அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியும் எனத் தீமானித்த தமிழ் மக்கள், அரசியலில் ஒற்றுமைப்படமுடியாமல் ஒருவரை ஒருவர் அறுத்துக் கழுவிக் கொண்டு தமிழ் இனத்திற்கு அநீதி இழைக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளுக்கும் பாடம் புகட்ட முடிவு செய்தனர்.

அந்தக் கருத்தியல் அமுலாகியது. யாழ்.மாவட்டத்தில் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி மூன்று ஆசனங்களைத் தனதாக்கியது. தமிழ் அரசியலில் இப்படி நடக்கும் என எவரும் எதிர்பார்க்காத நிலையில், தமிழ் மக்கள் வழங்கிய தீர்ப்பு எம் தமிழ் அரசியல்வாதிகளுக்கு மெய்ஞானத்தை உணர்த்தியிருக்க வேண்டும்.

ஆனாலும் அவர்கள் இன்னமும் ஒற்றுமைப்பட முடியாதவர்களாக இருந்ததன் காரணத்தால், நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் அவர்களால் வெற்றியைத் தனித்துப் பெற முடியாமல் போயிற்று.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தரப்புக்களை ஆதரிக்க வேண்டும் என்பதில் தமிழ் மக்கள் உறுதியாக இருந்தனர்.

ஆயினும் கூடுதல் பெரும்பான்மைப் பலத்தை தனியொரு தமிழ்க்கட்சிக்கு வழங்கி விடக்கூடாது என்பதிலும் தமிழ் மக்கள் மிகத் தெளிவாக இருந்தனர்.


தமிழ் மக்களின் அந்தத் தீர்மானமே எம்.ஏ.சுமந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரைச் சந்திக்கவும் ஒற்றுமை பற்றிச் சிந்திக்கவும் களம் அமைத்துள்ளது.

மேற்படிச் சந்திப்புக்கள் வெற்றி பெறவில்லை என்று உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. காரணம் நம் தமிழ்த் தரப்புக்களை பொறுத்த வரை பதவிகள் மட்டுமே அவர்களுக்குத் தேவையானவை. தமிழ் மக்களின் நலன் என்பது துணைக் காரணமேயன்றி அது மூல காரணமல்ல.

எது எவ்வாறாயினும் ஒற்றுமையில்லாத தமிழ் அரசியல் தரப்புக்களை தமிழ் மக்கள் அலையவிட்டுள்ளனர்.

இவர்கள் ஆற்றலைந்த பின்பேனும் ஒற்றுமைப்பட வாய்ப்புள்ளதா என்பது தமிழ் மக்களின் பரிசோதனை.

அவர்களின் அந்தக் கருத்து இயங்காது போனால், எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் எம் மக்கள் தமிழ் அரசியல் தரப்புக்களின் தலைகளில் சம்மட்டியால் அடிப்பர். இது நிறுதிட்டமான உண்மை.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

பாடகர் : டி.எம். சௌந்தரராஜன்
இசையமைப்பாளர் : கே.வி. மகாதேவன்
படம் :-திருவிளையாடல்



பார்த்தா பசுமரம் படுத்துவிட்டா நெடுமரம்
பார்த்தா பசுமரம் படுத்து விட்டா நெடுமரம் சேர்த்தா
வெறகுக்காகுமா ஞான தங்கமே
தீயிலிட்டா கறியும் மிஞ்சுமா

பார்த்தா பசுமரம் படுத்துவிட்டா நெடுமரம்
சேர்த்தா வெறகுக்காகுமா ஞான தங்கமே தீயிலிட்டா...

கட்டழகு மேனியைப்பார் பொட்டும்
பூவுமா நீட்டி கட்டையிலே
படுத்துவிட்டா காசுக்காகுமா (2)

வட்டமிடும் காளையைப்பார் வாட்ட
சாட்டமா வட்டமிடும் காளையைப்பார் வாட்ட
சாட்டமா கூனி வளைஞ்சி விட்டா ஒடம்பு இந்த ஆட்டம்
போடுமா கூனி வளைஞ்சி
விட்டா ஒடம்பு இந்த ஆட்டம் போடுமா

பார்த்தா பசுமரம் படுத்துவிட்டா நெடுமரம்
சேர்த்தா வெறகுக்காகுமா ஞான தங்கமே தீயிலிட்டா...

பொன்னும் பொருளும் மூட்ட கட்டி போட்டு வெச்சாரு
பொன்னும் பொருளும் மூட்ட
கட்டி போட்டு வெச்சாரு இவரு
போன வருஷம் மழைய நம்பி வித விதைச்சாரு т (2)

ஏட்டு கணக்க மாத்தி மாத்தி எழுதி
வெச்சாரு ஏட்டு கணக்க மாத்தி மாத்தி எழுதி
வெச்சாரு ஈசன் போட்ட கணக்கு மாறவில்ல போய்
விழுந்தாரு ஈசன் போட்ட
கணக்கு மாறவில்ல போய் விழுந்தாரு

பார்த்தா பசுமரம் படுத்துவிட்டா நெடுமரம்
சேர்த்தா வெறகுக்காகுமா ஞான தங்கமே தீயிலிட்டா...

அறுவடைய முடிக்கும் முன்னே
விதைக்கலாகுமா அட ஆண்டவனே உன்
படைப்பில் இத்தனை வேகமா (2)

பத்துபுள்ள பெத்த பின்னும் எட்டு மாசமா
பத்துபுள்ள பெத்த பின்னும் எட்டு மாசமா இந்த பாவி
மகளுக்கெந்த நாளும் கர்ப்ப வேஷமா இந்த பாவி
மகளுக்கெந்த நாளும் கர்ப்ப வேஷமா

பார்த்தா பசுமரம் படுத்துவிட்டா நெடுமரம்
சேர்த்தா வெறகுக்காகுமா ஞான தங்கமே தீயிலிட்டா...

சி.மகாலட்சுமி
கொக்குவில்

# திமிங்கிலத்தின் கழிவுகளால் கடலுக்கு இவ்வளவு நன்மைகளா?

திமிங்கிலத்தின் சிறுநீரால் கடல் நீருக்கு அதிகமான நன்மைகள் கிடைப்பதாகவும், இதனால் கடல் வாழ் உயிரினங்களின் உணவுச் சங்கிலி பாதுகாக்கப்படுவதாகவும் சமீபத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

பூமியின் மேற்பரப்பு சுமார் 75% நீரால் சூழப்பட்டுள்ளது. இதில் பெரும்பகுதி பெருங் கடல்கள், மீதம் உள்ளவை ஏரிகள் ஆறுகள் பனிப்பாறைகள் நிலத்தடிநீர்கள் என உள்ளன.

பூமியின் நீரில் சுமார் 96.5% கடல் நீராக உள்ளது. இந்தக் கடல் நீரைப் பாதுகாக்க, அதில் வாழும் திமிங்கிலம் முக்கிய பங்காக உள்ளது என்பது பலருக்கு தெரியாது. திமிங்கிலத்தின் எச்சங்கள் மற்றும் சிறுநீர் கடலுக்கும், கடல்வாழ் உயிரினங்களுக்கும் பல நன்மைகள் கொடுப்பதாக சமீபத்திய ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. திமிங்கிலத்தின் சிறுநீரால் கடலுக்கு நன்மையா? என்று பலரும் யோசிக்கலாம்.. இந்தப் பதிவில் இது குறித்து விரிவாக தெரிந்து கொள்ளலாம்.

### ஊட்டச்சத்து ஆதாரமாக திமிங்கலத்தின் சிறுநீர்

கடலின் பிரமாண்ட உயிரினமாக காணப்படும் திமிங்கிலங்கள், கடல் சுற்றுச்சூழல் அமைப்புகளில் இன்றியமையாத பங்கை வகிப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, திமிங்கிலத்தின் சிறுநீரில் நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் அதிக அளவில் உள்ளது.

இதுதான் கடலில் வாழும் தாவரமான தாவர நுண்ணுயிர் மிதவை வளர மிகவும் முக்கியமான ஒன்றாக உள்ளது. இந்தத் தாவரம் தான் கடலில் ஆக்சிஜனை அதிக அளவில் உற்பத்தி செய்து சிறிய மற்றும் பெரிய மீன்களின் உணவாகவும் உள்ளது.

திமிங்கிலங்கள் கடலில் சிறுநீர் கழிக்கும் போது அதில் உள்ள நைட்ரஜன் மற்றும் பாஸ்பரஸ் கடலில் பரவி பைட்டோபிளாங்க்டன் செழிப்பாக வளர உதவுகின்றன. இந்த செயல்முறையால் கடல் வாழ் உயிரினங்கள் ஒன்றோடொன்று இணைந்திருப்பதோடு, கடலின் உணவுச் சங்கிலியும் சமநிலையில் தொடர முடிகிறது.

### கடல் முழுவதும் ஊட்டச்சத்து கொடுக்கும் திமிங்கிலம்

ஆழ்கடலில் வசிக்கும் திமிங்கிலங்கள் சுவாசிக்கவும், கழிவுகளை வெளியேற்றவும் கடலின் மேற்பரப்புக்கு வருகின்றன. இதனால் ஆழ்கடலில் இருக்கும் சில ஊட்டசத்துக்கள் கடலின் எல்லாப் பகுதிக்கும் பரவுவதற்கு திமிங்கலங்கள் முக்கிய காரணமாக உள்ளன.

இதனால் கடலில் உள்ள கெட்ட நைட்ரஜன் அளவில் மாறுதல் ஏற்படுவதுடன் கடல் வாழ் தாவரமான பைட்டோபிளாங்க்டன் வளர்ச்சியும் செழிப்பாகிறது. அதுமட்டுமில்லாமல் கடல் உணவுச் சங்கிலிக்கும் பயனை அளிக்கிறது.

ஆழ்கடலில் வசிக்கும் திமிங்கிலங்கள் சுவாசிக்கவும் , கழிவுகளை வெளியேற்றவும் கடலின் மேற்பரப்புக்கு வருவதை ஆராய்ச்சியாளர்கள் திமிங்கில பம்ப் (whale pump) எனக் கூறுகின்றனர்.

### கார்பன் சுழற்சி

கடலில் திமிங்கிலங்களின் தாக்கம் ஊட்டச்சத்து சுழற்சியைத் தாண்டி கார்பனை பிரித்தெடுப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. கடல்வாழ் தாவரமான பைட்டோபிளாங்க்டன் கடலில் உள்ள கார்பன் டை ஆக்ஸ்சைடை நீக்க உதவுகின்றது. சமீபத்திய ஆராய்ச்சி முடிவுகளின்படி திமிங்கிலங்களின் உதவியுடன் ஆண் டுதோறும் 18, 180 தொன் கார்பன், கடலில் இருந்து பிரித்தெடுக்கப்படுவதாக கூறப்பட்டுள் ளது.

### ஊட்டச்சத்துக்களை எடுத்து செல்லும் திமிங்கிலங்கள்


திமிங்கிலங்கள் நிலையாக ஒரு பகுதியில் இருப்பதில்லை, கடலின் பல்வேறு பகுதிகளுக்கும் நீந்திச் செல்கின்றன. இதனை கடல் சார் நிபுணர்கள், "திமிங்கில கன்வேயர் பெல்ட்" என கூறுகின்றனர். திமிங்கில கன்வேயர் பெல்ட் **(Whale Conveyor Belt)** என்பது திமிங்கிலங்கள் கடல் நீரில் ஊட்டச்சத்துக்களை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு எடுத்துச் செல்வதைக் குறிப்பதாகும்.

உதாரணமாக, சாம்பல் திமிங்கிலங்கள் குளிர்காலத்தில் வடக்கு பசுபிக் பகுதிக்கு செல்கின்றன. கோடையில் கலிபோர்னியா கடற்கரையில் கூடுகின்றன. இதனால் கார்பன் மற்றும் நைட்ரஜன் உள்ளிட்ட அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் கடலின் பல்வேறு பகுதிகளுக்கும் எடுத்து செல்ல முடிகிறது. இதற்கு முக்கிய காரணியாக திமிங்கிலங்களின் இடப்பெயர்ச்சி உள்ளது.

### உணவுச் சங்கிலியில் பங்கு

ஏற்கனவே சொன்னது போல திமிங்கிலத்தின் சிறுநீரில் நைட்ர்ஜன், பாஸ்பரஸ் அதிக அளவில் உள்ளது. இதனால் தாவ்ர நுண்ணுயிர் மிதவை செழிப்பாக வளர்கிறது. இந்த தாவர நுண்ணுயிர் மிதவை கடலில் அதிக அளவில் இருக்கிறது. அதனை உண்பதற்கு சிறிய மீன்கள் வருகின்றன. அவற்றை உண்ண அதே பகுதிக்கு பெரிய மீன்களும் வருகின்றன, இதனால் ஒரு ஆரோக்கியமான உணவு சங்கிலித் தொடர் உருவாக திமிங்கிலங்களின் எச்சம் மற்றும் சிறுநீர் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தற்போதைய ஆராய்ச்சி முடிவில் திமிங்கலங்களுக்கும் கடலுக்கும் உள்ள உணவுச் சங்கிலி தொடர்பை பல ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து, கூறிவருகின்றனர். ஆனால் கடல் சூழலியலுக்கு திமிங்கிலங்களின் பங்களிப்புகளை முழுமையாகப் புரிந்துகொள்ள விஞ்ஞானிகள் இன்னும் விரிவான ஆய்வுகளை தொடர்ந்து நடத்தி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதை சொல்லும் பாடம்!



ஒதுக்குப்புறமான கடற்கரைப் பகுதி. ஒருவர் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தார். வயது நாற்பதைந்துக்கு மேலிருக்கும். அவ்வப்போது கடலைப் பார்ப்பதும், பிறகு தன் கையிலிருந்த புத்தகத்தில் ஆழ்ந்துவிடுவதுமாக இருந்தார்.

சிறிது நேரம் கழித்து, அவருக்குப் பக்கத்தில் வந்து அமர்ந்தான் ஓர் இளைஞன். அவர் கையிலிருந்த புத்தகத்தை எட்டிப் பார்த்தான். அது பகவத்கீதை. மெல்லச் சிரித்தான்.

அவன் சொன்னான். இது அறிவியல் யுகம். இந்தக் காலத்தில் முட்டாள்கள்தான் பகவத்கீதை மாதிரியான அரைப் பழசான புத்தகங்களையெல்லாம் படிப்பார்கள். இதைப் படிக்கும் நேரத்தில் அறிவியலைக் கற்றுக்கொண்டீர்கள் என்றால், இந்த நாடு ஓரடி உயருறதிற்கு அது உதவும்.

அந்தக் கனவான் அதற்கு பதில் எதுவும் சொல்லவில்லை. அவனிடம் கேட்டார். யாருப்பா நீ. என்ன வேலை பார்க்கின்றாய்?

எனக்கு சொந்த ஊர் கொல்கத்தா. சயின்ஸ் கிராஜுவேட். இங்கு இருக்கும் பாபா அட்டாமிக் ரிசர்ச் சென்டர் இல் என்னுடைய கரியரை ஆரம்பிப்பதற்காக வந்திருக்கிறேன்.

நல்லது தம்பி. நான் சென்றுவருகிறேன். என்று அந்தப் பெரியவர் எழுந்தார். அவ்வளவுதான். எங்கிருந்தோ நான்கு ஆயுதமேந்திய பாதுகாவலர்கள் விரைந்து வந்து அவரருகில் நின்றார்கள். அவருடைய கார் டிரைவர் ஓடிவந்து அவர் கையிலிருந்த புத்தகத்தை வாங்கிக் கொண்டார். அதைப் பார்த்த இளைஞன் மிரண்டு போனான். யார் சார் நீங்கள்? என்று கேட்டான்.

என் பெயர் விக்ரம் சாராபாய். பாபா அட்டாமிக் ரிசர்ச் சென்டரோட சேர்மன்.

இளைஞன், எந்த நிறுவனத்தில் தன் எதிர்காலத்தைத் தொடங்க வந்தானோ அதன் தலைவரே அவர் முன்னே நின்றுகொண்டிருக்கிறார். அவன் ஆடிப் போனான்.

விக்ரம் சாரபாய் விஞ்ஞானி, ஆராய்ச்சியாளர், இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை என்று போற்றப்படுபவர். அந்த நேரத்தில் 13 ஆராய்ச்சி நிறுவனங்கள் அவர் பெயரில் செயற்பட்டுக் கொண்டிருந்தன. இந்திய அணுதிட்டமிடல் குழுவின் தலைவராக அரசால் நியமிக்கப்பட்டவர்.

இளைஞன், அவருடைய இரு கரங்களையும் அழுத்தமாகப் பற்றிக்கொண்டான். என்னை மன்னித்து விடுங்கள் என்று அவன் கண்கள் கெஞ்சின.

விக்ரம் சாராபாய் சொன்னார். ஒவ்வொரு படைப்புக்கும் பின்னால் அதை உருவாக்கிய ஒருவர் இருப்பார். அது மகாபாரத காலமோ, கலியுகமோ மனிதனோட தேடல்தான் அணு ஆயுதப் பரிசோதனை வரை அறிவியலில் நம்மை வளர்த்தெடுத்திருக்கிறது.

அந்தத் தேடலுக்குப் பின்னால் இறையோ, இயற்கையோ எது வேண்டுமானாலும் இருக்கலாம். என்னை வழிநடத்துவது ஆன்மிகமும்தான். அதனால் கடவுளையோ, ஆன்மிகத்திற்கு வழிகாட்டும் நூல்களையோ மட்டமாக நினைக்காதே!.

சாராபாய் காரில் ஏறிப்போவதை அந்த இளைஞன் கண்ணிமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்தான்.

# ஆச்சி அறிவுரை



## நுங்கு விற்பனைப் பொருளாகிவிட்டது!

மாவை.நா.கஜேந்திரன்

**பேராண்டி...**

"சித்திரைக்குச் சிறுமாரி" எண்டு ஒரு பழமொழியுண்டு. கார்த்திகை, மார்கழியிலை பெய்மிறது பெருமாரி. மாசி, பங்குனியில் வெயில் வெளுத்து வாங்கும்.

அனேகமாக இந்தக் காலத்திலைதான் அக்கினி நட்சத்திரம் வரும்.

இந்த வெப்பத்தைத் தணிக்கிறத்துக்கு கண்ட கண்ட கெமிக்கல் சோடாக்களைக் குடிக்கிறதைத் தவிர்த்து, இளநீர், நுங்கு, மோர், தர்பூசணிப்பழம், வெள்ளரிப்பழம் போன்ற: இந்தக் காலத்திலை கிடைக்கிற உணவுகளை எடுத்துக்கொண்டால் உடல் ஆரோக்கியமா இருக்கும்.

அன்டைக்கு கே.கே.எஸ் வீதியாலை போகேக்குள்ள வீதியோரத்திலை நுங்குக் குலையை வைத்து ஒருத்தர் விற்பனை செய்து கொண்டிருந்தார்.

அட நுங்கும் விற்பனைக்கு வந்திட்டுதோ எண்டு வியப்பா இருந்திச்சுது.

நுங்கு ஒன்று என்ன விலை? எண்டு கேட்டன்.

இரண்டு நுங்கு 150 எண்டார் அவர். எனக்குத் தலை சுத்திச்சுது.

பேராண்டி, நாங்கள் சின்னப் பிள்ளையா இருக்கேக்க எங்கட ஐயா சம்பளத்துக்கு ஆள்பிடிச்சு நுங்கு வெட்டுவார்.

வீட்டு முற்றத்திலை எல்லாரும் ஒண்டா இருந்து, ஐயா வெட்டித்தாற நுங்குகளைக் குடிக்கிற சுகம் இருக்கே. அந்தக் காலங்கள் இனி எப்ப வருமோ எண்டு மனம் ஏங்கித் தவிக்குது.

வெயில் காலத்திலை வாற வியர்குருவுக்கு நுங்குத் தண்ணீரைப் பூசிவிட, சொல்லி வைச்ச மாதிரி பருக்கள் எல்லாம் இல்லாமல் போய்விடும். இப்ப பனைகள் அழிஞ்சுபோட்டுது. சீச்சீ... அழிச்சுப் போட்டினம்.

வெள்ளரிப்பழம் வெயில் வெக்கைக்கு மிகச் சிறந்த பழம். உடல் சூட்டைத் தணிக்கக்கூடியது.

அதிலும் சண்டிலிப்பாய் வயலிலை விளைமிற வெள்ளரிப்பழம் திறம். வயல் வெளியிலை இருக்கிற பூவரச மர நிழலில, பனையோலையில மடிச்சுக்கட்டி பழங்களை விற்பனை செய்வினம் தோட்டக்காரர்.

அதால அவைக்கு இலாபம் கிடைக்கும். சந்தைக்குக் கொண்டு போனால் பத்துக்கு மூன்று கழிவு, தரம் – அது – இதுவெண்டு விவசாயிகளின்ர வயித்திலை அடிக்கிறதுக்கெண்டே ஒரு கூட்டம் இருக்குதெல்லோ.

உதுகளெல்லாம் உப்பிடி கறுமக் காச உழைச்சு என்னத்தைத்தான் கொண்டு போகப் போகுதுகளோ?

கடைசியிலை கட்டி இருக்கிற அருணாக் கயிறுமெல்லோ அறுபடும் பேராண்டி. சரி, அதவிடுவம்.


வீதி ஓரங்களிலை சிறிய வண்டிகளிலை சர்பத், தோடை, எலுமிச்சை யூஸ் விக்கிற ஆக்கள் அவதானமா நடந்து கொள்ளவேணும். விலை குறைவு, தரம் அதிகம் எண்ட நம்பிக்கையில்தான் சனம் இறங்கி நிண்டு அதுகளை வாங்கிக் குடிக்குதுகள்.

யூஸ் தயாரிக்கிறதுக்குப் பயன்படுத்துற தண்ணீர் சுத்தமானது எண்டுறதை மனச்சுத்தியோட உறுதிப்படுத்தவேணும்.

சுத்தமில்லாத தண்ணீரைப் பயன்படுத்தினால் அதனால பயங்கரமான வியாதிகள் வந்துவிடும்.

பேராண்டி! சாதாரணமான மனிதர் ஒரு நாளைக்கு 2 லீற்றர் தண்ணீர் குடிக்கவேணும். வெயில் கடுமையான காலங்களிலை தண்ணீர் குடிக்கிறதை குறைக்கக்கூடாது. நீரிழப்பு உயிர் ஆபத்துக்களையே ஏற்படுத்திவிடும்.

**ஆச்சி வருவா...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சி அவசியம் அத்தியாவசியம்



எடைக்குறைப்பு, ஆரோக்கியமாக இருக்க, மூட்டுவலி, கால்வலி, மெனோபாஸ் உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக உடல் எடையைக் குறைக்க வேண்டிய நிலையில் பல பெண்கள் உள்ளனர். ஆனால், வேலைக்குச் செல்வது, குடும்பப் பொறுப்புகள், சமையல், வீட்டு வேலை, குழந்தை வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் வோக்கிங் செல்வதற்கோ, ஜிம்முக்கு செல்வதற்கோ ஆர்வம் இல்லாமல் இருக்கின்றனர். இந்த நிலையில் ஆர்வத்துடன் வோக்கிங், உடற்பயிற்சியில் ஈடுபட இந்த 7 விடயங்களைச் செய்து பாருங்கள் என்கிறார் சென்னையைச் சேர்ந்த ஃபிட்னெஸ் கோச் லிஜி விஜய்.

**1. நேரத்தைக் கண்டுபிடியுங்கள்!**

நேரமின்மைதான் பெண்களின் பெரிய பிரச்சினையே. முதலில் ஒரு நாளைக்கு 5-10 நிமிடங்கள் மட்டும் ஒதுக்கி ஏதாவது உடற்பயிற்சியைச் செய்யத் தொடங்குங்கள். தொடர்ந்து செய்யும் போது அதன் மீது ஆர்வம் உண்டாகி, நீங்களே நேரத்தை நீட்டித்து விடுவீர்கள்.

**2. வீட்டினுள்ளேயே பயிற்சி!**

அறையினுள் வோக்கிங், பெட்ரும், சமையல் அறையில் செய்யக்கூடிய சுவர் புஷ்-அப், நாற்காலியில் அமர்ந்தவாறே செய்யக்கூடிய உடற்பயிற்சி, சோபாவில் அமர்ந்தபடியே செய்யும் ஸ்ட்ரெச்சிங் பயிற்சிகள் என வீட்டுக்குள்ளேயே செய்வதற்கு பல பயிற்சிகள் உள்ளன.

**3. பழக்கமாக மாற்றுங்கள்!**

உடற்பயிற்சியை ஒரு வழக்கத்தை உருவாக்குங்கள். ஒரு நாளில் குறிப்பிட்ட நேரம் என்பது உடற்பயிற்சிக்கானது என்பதைப் பின்பற்றத் தொடங்குங்கள். வீட்டில் உள்ளவர்களுக்கும் அதை மனதில் பதிய வையுங்கள். உங்களுக்கான தனிப்பட்ட உடற்பயிற்சி நேரத்தில் வேறு வேலைகளையோ, கடமைகளையோ முடிக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள்.

**4. மகிழ்ச்சி வேண்டும்!**

எந்தவிதமான உடற்பயிற்சியில் ஈடுபட்டாலும் மகிழ்ச்சியாக உணர்கிறீர்களா, உங்கள் உடல் அதை ஏற்றுக் கொள்கிறதா என்று பாருங்கள். உடற்பயிற்சி செய்யும் போது மூட்டுவலி, தசைப்பிடிப்பு போன்றவை ஏற்பட்டால், அதன் மீதான ஆர்வம் குறையும். அப்படியானவர்கள் நிபுணர்களின் ஆலோசனை பெற்று உடல் ஏற்றுக்கொள்ளும் வேறு வகையான பயிற்சிகளுக்கு மாறுவது நல்லது.

**5. எளிதான இலக்குகள்!**


இன்று 12,000 அடிகள் நடக்க வேண்டும். என்பது போன்ற சாத்தியமில்லாத இலக்குகளை நிர்ணயிக்காதீர்கள். ஆரம்ப நிலையில் 6,000 அடிகள் நடக்க வேண்டும் என்பது போன்ற எளிதான இலக்குகளைத் துரத்தலாம். கொஞ்சம் கொஞ்சமாக இலக்குகளை அதிகரித்துக் கொண்டே செல்லலாம். ஆரம்பத்திலேயே பெரிய இலக்குகளை நிர்ணயித்தால், அதுவே மலைப்பை ஏற்படுத்தி, ஆர்வத்தைக் குறைக்கலாம்.

# அடுக்களைப் பக்கம்...



1. கேழ்வரகுடன் கம்பு சேர்த்துப் புட்டு செய்தால் மிகவும் சுவையாக இருக்கும்.
2. சப்ஜா விதைகளை ஊறவைத்து பழச்சாற்றுடன் சேர்த்துச் சாப்பிட, குடல் சூடு தணிந்து குளிர்மையாக இருக்கும்.
3. பொரியல்களுக்காக கடலைப்பருப்பு, மல்லி (தனியா), மிளகாய் எனச் சேர்த்து மசாலா அரைக்கும்போது, ஒரு ஸ்பூன் கம்பு சேர்த்து வறுத்து அரைத்தால், சுவை கூடும். வாரத்துக்கு இருமுறை அல்லது தினமும்கூட சிறிதளவு சிறுதானியம் சேர்த்துச் சாப்பிட, ஆரோக்கியம் கூடும்.
4. சாம்பாருக்குப் பருப்பு வேகவைக்கும்போது ஒரு டேபிள் ஸ்பூன் கொள்ளு சேர்த்து வேகவைத்து சாம்பார் வைக்க, உடலில் கொழுப்பு சேராமல் இருக்கும்.
5. கோதுமையில் பரோட்டா செய்யும்போது ஒரு டேபிள் ஸ்பூன் ஓமம் கலந்து செய்யலாம். சுவையாகவும் எளிதில் ஜீரணமும் ஆகும்.





## சமைப்போம் சுவைப்போம்

## காளான் பாஸ்தா



**தேவையானவை :**

1. காளான் – 200 கிராம்
2. பாஸ்தா – 100 கிராம்
3. ஆலிவ் ஆயில் – 2 டேபிள்ஸ்பூன் + ஒரு டீஸ்பூன்
4. வெது வெதுப்பான பால் – ஒரு கப்
5. நறுக்கிய குடமிளகாய் – ஒரு கப்
6. நறுக்கிய தக்காளி – ஒரு கப்
7. நறுக்கிய வெங்காயத்தாள் – ஒரு கப்
8. துருவிய சீஸ் – ஒரு கப்
9. உப்பு – ஒரு டேபிள் ஸ்பூன்
10. மிளகுத்தூள் – ஒரு டேபிள் ஸ்பூன்
11. மிளகாய் நறுக்கியது அரை டேபிள் ஸ்பூன்

**செய்முறை**

பாஸ்தாவுடன் 2 கப் தண்ணீர், ஒரு டீஸ்பூன் ஆலிவ் ஆயில், அரை டேபிள் ஸ்பூன் உப்பு சேர்த்து, தண்ணீர் வற்றும் வரை வேகவைக்கவும். ஒரு கடாயில் 2 டேபிள் ஸ்பூன் ஆலிவ் ஆயில் ஊற்றி நறுக்கிய காளான், குடமிளகாய், வெங்காயத்தாள், தக்காளி சேர்த்து, மிளகாய் செதில், ஒரிகானோ, மிளகுத்தூள், அரை டேபிள் ஸ்பூன் உப்பு சேர்த்து சற்றே கிரிஸ்பியாக இருக்கும் வரை வதக்கவும். இறக்கும்போது வெது வெதுப்பான பால் கலந்து நாம் வேகவைத்து எடுத்துவைத் திருக்கும் பாஸ்தாவையும் சேர்த்து ஒரு நிமிடம் நன்றாக கலந்து இறக்கவும்.

பேக்கிங் பானில் (Baking Pan) அடிப்பரப்பில் வெண்ணெய் தடவி அதன் மேல் பாஸ்தா கலவையை ஊற்றவும். அதன்மேல் துருவிய சீஸைப் பரப்பவும். இதை அவனில் (Oven) 20 நிமிடங்கள் 200 டிகிரி செல்ஷியஸ் வெப்பத்தில் வைத்து எடுக்கவும்.

**கண்ணுக்குத் தெரியாத முட்டை வடிவக் காளான்கள் முதல் பெரிய அளவு காளான்கள் வரை பல வகைகள் உள்ளன.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இணையத்தை திறந்தால் வேடன் – வேடன் – வேடன் என்ற கோசம் விண்ணதிர்கின்றது. ஈழத்தைப் பூர்வீகமாகக் கொண்ட வேடன் கேராளவின் ராப் பாடகர். ஒடுக்கப்பட்ட இனத்திற்கு ஆதரவாக அவனின் வரிகள் ஒவ்வொன்றும் துப்பாக்கியாய் வெடிக்கின்றன."

**அவன் தன் தாய்க்காக எழுதிய வரிகள்...**

கொங்கிறீற்று வனத்தின் ஊத்திலே
நவீன அடிமைகள் வாழும்
நரகம் போல் ஒரு இடத்திலே
என்னைப் பெற்றவள்
கல்லுபோல் ஒருத்தி
அவளை யாழ்ப்பாணத்திலிருந்து
துரத்தி அவளின் உதிரத்தில்
இருந்து உருவெடுத்தது
பருத்தியல்ல எரிக்கும் தீ...

# கேரளத்தைக் கலக்கும் ஈழத்தமிழன்

**வேடன்** இப்போதைக்கு மலையாள ஊடகங்களின் பேசுபொருள். சாதாரணமாக ராப் பாடல்களை எழுதி, பாடி யூடியூபில் பதிவிட்டுக்கொண்டிருந்த அந்த இளைஞருக்கு இன்று கேரளத்தில் பெரிய ரசிகர் பட்டாளமே உருவாகியிருக்கிறது. யார் இவர்? திடீரென மலையாள ஊடகங்களில் பேசப்படக் காரணம் என்ன? தொடர்ந்து பார்க்கலாம்.

**வேடன்:**

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழரான தாய்க்கும் கேரளாவைச் சேர்ந்த முரளி என்பவருக்கும் திருச்சூரில் பிறந்தவர்தான் ஹிரந்தாஸ் முரளி. திருச்சூர் ரயில் நிலையத்திற்கு அருகிலுள்ள ஸ்வப்னபூமி (கனவுகளின் நிலம்) என்ற பகுதியில்தான் வளர்ந்தார். சிறுவயது முதலே பாடல், இசை மீது ஆர்வம் இருந்தது. அதனால், தொடர்ந்து கவிதை எழுதுவது, தமிழ்ப் பாடல்களை மலையாளத்தில் எழுதிப் பாடுவது எனத் தன் கலைப் பயணத்தைத் தொடங்கினார்.

சிறுவயதில் ஆற்றில் மீன்பிடிக்கச் செல்லும் போது மீன் அம்புகளைச் சரியாகக் குறிபார்த்து எறிவாராம். அப்போது அவருக்கு விளையாட்டாக வைக்கப்பட்ட பெயர்தான் வேடன்.

இந்தப் பெயருக்குப் பின்னணியில் சாதிய அடையாளமும் இருக்கிறது என்பது புரிந்து, அந்தப் பெயராலேயே மக்களிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அது அப்படியே மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

**கட்டுமான தொழில்:**

பள்ளிப் படிப்பை மட்டும் முடித்த வேடன், ஒருகட்டத்தில் பொருளாதாரத் தேவைக்காக வேலைக்குச் செல்ல தீர்மானித்தார்.

அதன்படி அங்கிருக்கும் சிலருடன் சேர்ந்து கட்டுமான தொழிலுக்குச் சென்றிருக்கிறார். வேலை செய்து கொண்டிருக்கும் போதுகூட பாடல் பாடிக் கொண்டிருப்பார் என்கின்றனர்.

அவரின் கலை ஆர்வம் அவரை எடிட்டர் பி.அஜித்துக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறது. பி.அஜித்தின் அலுவலகத்தில் ஆபிஸ் பாயாக வேலைக்கு அமர்த்தப்பட்டார்.

**ராப் கலைஞர்கள் அறிமுகம்:**

காலப்போக்கில் அவருக்கு டூபக் ஷகுர், எமினெம், அறிவு போன்ற ராப் பாடகர்களின் பாடல் அறிமுகமாகியிருக்கிறது. அவர்களின் பாடலில் இருக்கும் வலியும், உணர்ச்சியும் அவரை அவர் சார்ந்த வரலாறு நோக்கியும், போர் பாதிப்பு உள்ளிட்ட அடக்குமுறைகள் குறித்து அறிந்து கொள்ள வழிசெய்திருக்கிறது.

அப்போதுதான் ராப் பாடல்களை எழுதத் தொடங்கியிருக்கிறார்.

**முதல் ஆல்பம்:**

நான் பாணன் அல்ல... பறையன் அல்ல... புலையன் அல்ல... என்பது போன்ற சாதி, வர்க்க, மத அடக்குமுறைகளுக்கு எதிராக வாய்ஸ் ஆஃப் தி வாய்ஸ்லெஸ் என்ற தலைப்பில் ஜூன் 2020 இல் முதல் தனியிசைப் பாடலை வெளியிட்டார்.

அவரின் இசையும், குரலும், உணர்ச்சி கொந்தளிக்கும் வார்த்தைகளும் ''யார்டா இந்தப் பையன்'' என மலையாள உலகைத் திரும்பிப் பார்க்க வைத்தது. அப்போது முதல் வேடனுக்கு ஏறுமுகம்தான்.

**தொடர்ந்து குரல்:**

வேடனின் ராப் பாடல்களில், புரட்சிகரக் கருத்துகள் நிறைந்திருந்தன. அதேபோல எங்கெல்லாம் அடக்குமுறைகள் நடக்கிறதோ அது தொடர்பாக வேடன் பாடத் தொடங்கினார்.

பாலஸ்தீனம் முதல் அமெரிக்காவில் தாக்கப்பட்ட கறுப்பின பெண் வரை சமூக அடக்குமுறைக்கு எதிராக உறுதியாகத் தெளிவாகக் குரல் கொடுக்கத் தொடங்கினார்.

**திரைப்பயணம்:**

2021ஆம் ஆண்டில், வெளியான ''நயட்டு'' என்ற மலையாளப் படத்தின் ''நரபலி'' என்ற பாடலைப் பாடி திரைத் துறையில் முதல் அடியை எடுத்து வைத்தார்.

2023ஆம் ஆண்டில், சர்வதேச விருது வென்ற ''ஆல் வி இமேஜின் அஸ் லைட்'' படத்தில் ''கிஸ்ஸஸ் இன் தி கிளவுட்ஸ்'' பாடலையும் எழுதிப் பாடியிருந்தார்.

மலையாள பிளாக்பஸ்டர் மஞ்சும்மல் பாய்ஸில் இசையமைப்பாளர் சுஷின் ஷ்யாமுடன் இணைந்து ''குத்தந்திரம்'' பாடலுக்கான வரிகளை எழுதிப் பாடினார்.

அதைத் தொடர்ந்து பல படங்களில் பணியாற்றி வருகிறார். ஆனால், வேடனுக்குப் படத்தில் பாடல் எழுதுவதைவிட தனியிசைப் பாடலுக்காக எழுதுவதுதான் மிகவும் பிடிக்கும் எனப் பேட்டியளித்திருக்கிறார்.




# தெளிவே என் சிந்தனையுள்... 12

ஒரு ஊரில் வாழ்ந்த ஓர் இளைஞனிடம் கெட்ட பழக்கங்கள் அதிகம் இருந்தது. தந்தை எவ்வளவு புத்திமதி சொல்லியும் அவன் திருந்துவதாயில்லை.

ஒருநாள் தந்தை அவனை ஊரின் எல்லையில் இருந்த ஆச்சிரமத்துக்கு அழைத்துச் சென்று, அங்கிருந்த துறவியிடம் தன் மகனைத் திருத்தும்படி கேட்டார்.

துறவியும் ஏன் நீ கெட்ட பழக்கங்களில் மூழ்கிக் கிடக்கிறாய் எனக் கேட்டார். அதற்கு அந்த இளைஞன் "இது எனக்குப் பொழுதுபோக்கு. இதை என் காலம் முழுவதும் தொடர மாட்டேன்" என்றான்.

துறவி அந்த இளைஞனை தோட்டத்திற்கு அழைத்துச் சென்றார்.

ஒரு சிறிய புல்லைக் காட்டி பிடுங்கும்படி கூறினார். இளைஞன் சுலபமாகப் பிடுங்கி எறிந்தான்.

துறவி சற்றுப் பெரிய செடி ஒன்றைப் பிடுங்கும்படி கூறினார். இளைஞனோ, சற்றுச் சிரமப்பட்டு அதைப் பிடுங்கி எறிந்தான்.

துறவியோ பெரிய மரம் ஒன்றைக் காட்டி அதைப் பிடுங்கும்படி கூறினார்.

இளைஞனோ, "அது பெரிய மரம். அதை எப்படி பிடுங்க முடியும்" என்றான்.

அன்பர்களே! எம்மிடம் இருக்கும் பழக்க வழக்கங்களும் இந்தக் கதைக்கு ஒப்பானதே. அது வெறும் பொழுதுபோக்கிற்காக என்று எண்ணி எம்மால் தொடரப்படும் ஒரு செயல், எமது வாழ்க்கையையே அழிப்பதாய் அமைந்துவிடும்.

தற்போதைய தலைமுறையும் இவ்வாறான வழியிலேயே செல்கிறது.

பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது, வெறும் பொழுதுபோக்குகிற்காக மேற்கொள்ளும் மதுப்பழக்கம் அவன் வாழ்நாள் முழுவதும் நிழலாய்த் தொடரும் கதைகளை இன்றுவரை நாம் பார்த்திருப்போம்.

ஒரு விடயத்தை மேற்கொள்ளப் போகிறோம் எனின், அதில் உள்ள நல்லதை - கெட்டதை பகுப்பாய்வு செய்யவேண்டும்.

குறித்த செயலால் நமக்கு நன்மை உண்டாகுமானால் அதைத் தொடரலாம். அது தீமையைத் தருமாயின் அதைத் தொடராமல் விடுவதே சாலச் சிறந்தது.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ். கோட்டை

57

**செங்கை ஆழியான்**

யாழ் கோட்டை இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தின் மீது மிருகத்தனமான தாக்குதல்களைச் செய்தாலும் நாம் மனிதாபிமானமுறையில் நடந்துள்ளோம் கோட்டைக்குரிய தண்ணீரை அவர்கள் இரந்து கேட்டதால் வழங்கினோம்.

அடம் பனில் கொல்லப்பட்ட ஸ்ரீலங்கா வீரரின் சடலங்களைத் தரும் படி கேட்டபோது கப்டன் கொத்தலாவலையிடம் கோட்டை வாசலில் வைத்து வழங்கினோம். அடம்பனில் கைதான கைதிகளைப் பரிமாறிக் கொண்டோம்.

“யாழ் கோட்டை முற்றுகைக்காலத்தில் என்னைக் கொல்வதற்குச் சதியொன்று நடந்தது. அச்சதியில் நான் தப்பிவிட்டேன். 30, மார்ச், 1987 அன்று இரவு என் வாகனத்தின் மீது கைக்குண்டு வீசப்பட்டது. அதில் எனது ஒரு காலை நான் இழக்க நேரிட்டுவிட்டது.

“யுத்த முனையில் எதுவும் எனது உத்தரவின்படியே நடக்கும். அவசர முடிவுகளை எடுக்க அங்கேயுள்ள எனது தளபதிகளுக்கு அதிகாரமுள்ளது. அவர்கள் எல்லோரும் நான் எப்படிச் சிந்திப்பேனோ அப்படியே சிந்திக்கப்பயிற்சிப்பெற்றவர் என்ற தங்களது கூற்றை நான் மறக்கவில்லை. எனது முற்றுகைக் கடமையைச் செவ்வனே நிறைவு செய்துள்ளேன்.

எனது முற்றுகையை நிறைவு செய்து இந்திய அமைதிப்படையிடம் யாழ் கோட்டையைக் கையளிக்கின்ற வேளையில், சாத்தானின் உதவி பெற்றாவது தீவிரவாதிகளை ஒழிப்பேன்” என்ற ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் வார்த்தைகள் ஏனோ நினைவு வருகின்றன.”

இவ்வாறு தளபதி கிட்டுவின் அறிக்கை அமையும். நள்ளிரவு வேளையில் விமானங்கள் மூலம் இந்தியப் படை யாழ்ப்பாண மண்ணில் கொண்டுவந்து இறக்கப்பட்டது. பின்னர் கப்பல்கள் மூலம் படை வீரர்களும், யுத்த கனரகத் தளபாடங்களும் தமிழ்ப்பகுதிகளில் குவிக்கப்பட்டன. 03. ஆகஸ்ட், 1987 ஆம் ஆண்டு இந்தியத் துருப்பினரில் ஒரு சிறு பகுதியினர், யாழ் கோட்டைக்குள் பிரவேசித்தனர். கோட்டை வாசலில் அவர்களை எதிர்கொண்ட ஸ்ரீலங்கா இராணுவப் பிரிகேடியர் கோட்டையின் பொறுப்பை இந்தியப் படையிடம் கையளித்தார்.

யாழ்ப்பாணக் கோட்டை வாசலில் இந்திய இராணுவத்தினரின் பொறுப்பேற்பைப் படம் பிடித்த சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர், இந்திய அமைதிப் படைக் கப்ரின் ஒருவரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டார்.

இந்தியப்படையினர் யாழ்ப்பாணக் கோட்டைக்குள் இலங்கையைவிட்டு வெளியேறும் வரை நிலைகொண்டிருந்தனர். அக்காலவேளையில் ஒரு தடவை கோட்டைக்குள்ளிருந்து இந்திய இராணுவம் வெளிவரவிடாது பொது மக்கள் தடுத்து நிறுத்தி இருக்கிறார்கள்.

(தொடரும்...)

# மரக்கலமல்ல.. மனக்கலம்

## கடற்புறா




இளையபல்லவன் தன் கூரிய விழிகளை அவன் பக்கம் திருப்பி “எதற்கு நன்றி தேவரே?” என்று வினவினான்.

“உங்கள் முகத்தில் திருப்தியின் குறி தெரிகிறது?” தயக்கமின்றி வந்தது கண்டியத் தேவன் பதில்.

உள்ளத்தில் திருப்தி ஏற்பட்டால் முகத்தில் தெரியாதா? என்று கேட்டான் இளையபல்லவன். தெரிந்தது. அதற்குத்தான் நன்றி கூறினேன். நன்றி எதற்கு?

தொழில் செய்பவனுக்கு, தன் தொழில் பிறருக்குத் திருப்தியளிக்கிறது என்பதைவிடப் பெரும் ஊதியமோ பரிசோ கிடையாது.

உண்மை. அதிலிருக்கும் மகிழ்ச்சி வேறெதிலும் இல்லை. ஆமாம். என் வேலையைப் பற்றி நீங்கள் திருப்தியடைந்திருக்கிறீர்கள். பெருமையும் அடைந்திருக்கிறீர்கள். அது எனக்குப் பெரும் சன்மானமல்லவா?

அதற்காகத்தான் நன்றி தெரிவித்தேன். ஆனால் இதில் முழு பெருமை என்னுடையதல்ல. உங்கள் கருத்துப் படி மாற்றியமைக்கிறேன். அவ்வளவுதான்.

கருத்துக்கு உருக்கொடுப்பது அத்தனை எளிதல்ல தேவரே. உமது முயற்சியில்லையேல் இத்தனைத் துரிதமாக இந்த மரக்கலம் தயாராகாது.

அதுவும் இத்தனை அழகாகத் தயாராகாது. என்று சிலாகித்த இளையபல்லவனை இடைமறித்த கண்டியத்தேவன் சொன்னான்: இதற்குள் சிலாகித்து விடாதீர்கள் படைத்தலைவரே. இன்னும் ஐந்து நாட்கள் கழித்துப் பாருங்கள்.

இளையபல்லவன் சரேலென இமைகளை வியப்புடன் தூக்கினான். என்ன? இன்னும் ஐந்து நாட்கள் கழித்தா? என்றும் வினவினான். குரலில் வியப்பின் ஒலி மண்டிக்கிடக்க

ஆம். ஐந்தே நாட்கள்! என்றான் கண்டியத்தேவன். “அதற்குள்...?” என்று கேட்டான் இளைய பல்லவன்.

“மரக்கலம் தயாராகிவிடும்.” என்றான் தேவன். இளையபல்லவன் பதில் திட்டமாகவும் மிக வேகமாகவும் வெளிவந்தது. “கூடாது, கூடாது. இன்னும் பத்து நாட்களுக்கு இது முடியக்கூடாது.”

“ஏன் கூடாது?” கண்டியத் தேவன் ஆச்சரியத்துடன் கேட்டான். “மரக்கலத்தை மாற்றியமைக்க ஒரு மாதம் கேட்டீரே?”

“ஆம். கேட்டேன்.” இன்னும் ஒரு மாதம் ஆகவில்லையே.”

“பத்து நாட்களில் ஆகிவிடும்.” சரி, பத்து நாட்கள் எடுத்துக் கொள்ளும்.” அத்தனை நாட்களுக்கு வேலை இல்லையே?”

“வேலையில்லாவிட்டால் கப்பலை அழகுபடுத்தும். ஏதாவது செய்யும். வேலை மட்டும் பத்து நாட்களுக்கு முன்பு முடியக்கூடாது.” “அமாவாசைக்கு எத்தனை நாள் இருக்கிறது?”

இன்றுதான் பௌர்ணமி, இன்னும் பதினைந்து நாட்கள் இருக்கின்றன.

அதுவரையில் காலம் கடத்தலாம். இளையபல்லவனின் இந்தக் கண்டிப்பான உத்தரவுகளுக்குக் காரணம் தெரியாத கண்டியத்தேவன் வியப்பின் எல்லையைத் தொட்டான்.

தாமதத்துக்குத்தான் தார்க்கோல் போடுவார்கள். துரிதத்துக்குத் தடைபோடும் படைத்தலைவனை இதுவரையில் நான் கண்டதில்லை. என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டான் கண்டியத்தேவன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DLB
DEVELOPMENT LOTTERIES

ஜய சம்பத JAYA SAMPATHA

2025.05.02. முதல் 2025.05.29 ம் திகதி வரை

# ரூ.மில்லியன் 181 க்கு அதிகமான பரிசுகள்

## ரூ.250,000/- பரிசுகள் 29

## ரூ.50,000/- பரிசுகள் 768

சுபிரி ஜய சம்பத லொத்தரின் சீட்டிழுப்பின் இறுதி இலக்கங்கள் 04 மற்றும் ஆங்கில எழுத்துடன் பொருத்தி ஜய சம்பத லொத்தர் மூலம் பல பரிசுகளை வெல்லவும்.

| பரிசமைப்பு | பரிசின் பெறுமதி |
|---|---|
| ஆங்கில எழுத்து பொருத்துவதன் மூலம் | ரூ. 80/- |
| 02 இலக்கங்கள் அச்சிடப்பட்ட நிரலில் வலமிருந்து இடமாக முறையே பொருத்துவதன் மூலம் | ரூ. 1,000/- |
| 03 இலக்கங்கள் அச்சிடப்பட்ட நிரலில் வலமிருந்து இடமாக முறையே பொருத்துவதன் மூலம் | ரூ. 4,000/- |
| 04 இலக்கங்கள் அச்சிடப்பட்ட நிரலில் வலமிருந்து இடமாக முறையே பொருத்துவதன் மூலம் | ரூ. 50,000/- |
| ஆங்கில எழுத்துடன் 04 இலக்கங்கள் அச்சிடப்பட்ட நிரலில் வலமிருந்து இடமாக முறையே பொருத்துவதன் மூலம் | ரூ. 250,000/- |



அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02
தொ.பே - 0114 824 824

www.dlb.lk


(C-159)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷாருக்கானின் "ஜவான்" படத்துக்குப் பிறகு அல்லு அர்ஜுனை இயக்கிவரும் அட்லி, விரைவில் டாக்டர்ஆகிறார். கலைத்துறையில் அவரது சேவையைப் பாராட்டி, கௌரவ டாக்டர் பட்டத்தைக் கொடுக்க உள்ளது நம் ஊர் சத்யபாமா பல்கலைக்கழகம். ஜூன் 14ஆம் திகதி பட்டமளிப்பு விழா நிகழவிருக்கிறது.



# முகம் 10; ரஜினிகாந்த்





"கே.ஜி.எஃப்" வில்லன் அவினாஷ், விஜய் சேதுபதியின் "ஏஸ்" படத்திலும் வில்லனாக ஸ்கோர் செய்திருக்கிறார். விஜய் சேதுபதி சார், மிக அற்புதமான மனிதர். ஷூட்டிங்கின்போது அவரைக் காண பெரும் கூட்டம் எப்போதும் காத்திருக்கும். எல்லோரிடமும் பொறுமையாக நின்று அவர் பேசுவது, ஆச்சரியமாக இருந்தது. அவரைச் சுற்றி ஓர் அற்புதமான ஆரா உள்ளது என்று நெகிழ்கிறார் அவினாஷ்.



01. ரஜினி வீட்டில் இருக்கும் நேரங்களில் "ஓம்" என்னும் பிரணவ மந்திரம் ஒலித்துக்கொண்டே இருக்கும். எப்போதும் சிறு அதிர்வை உண்டாக்கும் இசைதான் அவருக்குப் பெரு விருப்பம்.

02. நல்ல நாட்களிலும், விசேட தினங்களிலும் எஸ்.பி. முத்துராமன் தன்னுடன் இருந்தால் சந்தோஷப்படுவார். பெரும் திரளான மக்களிடம் கொண்டு போய்ச் சேர்த்தவர் என்றவகையில் எஸ்.பி.எம் மீது மரியாதை உண்டு. தான் நடித்ததிலேயே பிடித்த படம் "முள்ளும் மலரும்" என்பார். சினிமாவில் நண்பர் என்றால் முன்பு ஜெய்சங்கர், அடுத்து கமல்ஹாசன். கமல் - ரஜினி சந்திப்பு எந்த நேரத்தில் நினைத்தாலும் நடந்துவிடும். அப்படியொரு ஹாட் லைன் தொடர்பு அவர்களிடம் உண்டு.

03. குட்டிக்கதைகள், பொன்மொழிகள், பழமொழிகளை யார் பேசினாலும் ரசிப்பார். அது சம்பந்தமான புத்தகங்களைச் சேகரித்து வைத்திருக்கிறார். சூழ்நிலைக்குப் பொருந்தியிருந்தால் அவற்றை மேடைப் பேச்சில் கச்சிதமாகப் பயன்படுத்தி விடுவார். தமிழ், கன்னடம், தெலுங்கு, மராத்தி, மலையாளம், ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளில் சரளமாக உரையாடுவார்.

04. பல வருடங்களுக்கு முன்பு தன் சுயசரிதையை எழுத வேண்டும் என்ற எண்ணம் வந்தது. எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் அவர் நண்பர் என்பதால் அவரிடம் தன் அனுபவங்களைப் பகிர்ந்து எழுதச் சொன்னார். அப்புறம் என்ன காரணத்தாலோ அது தடைபட்டது. இப்போது மீண்டும் அவருக்கு சுயசரிதை எழுதுவதில் ஆர்வம் வந்திருக்கிறது.

05. இமயமலை மட்டும் இல்லாமல் எந்த ஆன்மிக ஸ்பாட்டுக்குப் போனாலும் அங்கிருந்து ருத்ராட்சம் வாங்கி வந்து சேர்த்து வைப்பது ரஜினியின் வழக்கம். அப்படிச் சேர்த்த ருத்ராட்சங்கள் அவர் வீட்டில் நிறைய இருக்கின்றன. மிக நெருங்கியவர்களுக்கு அவரின் ருத்ராட்சம் அன்பளிப்பாகக் கிடைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

06.அவர் நடித்த தமிழ்ப் படங்கள் ஜப்பான், ரஷ்ய மொழிகளிலும் மொழிமாற்றம் செய்யப்பட்டு வெளியிடப்படுகின்றன. அப்படி முதன்முதலில் ஆரம்பித்த படம் "முத்து". அதற்குப் பிறகு தொடர்ச்சியாக அவர் படங்கள் டப் ஆகின்றன. அதனால் பெருகிய ரஜினி ரசிகர்கள் அங்கே ஏராளம்.

07.தன்னைப் பார்க்க வருகிறவர்கள் சிறுவர்களாக இருந்தால்கூட, எழுந்து நின்று வரவேற்பது ரஜினியின் வழக்கம். அதே மாதிரி தன்னைச் சந்திக்க வருபவர்கள், ஆசுவாசமான பிறகு தான் பேசவே ஆரம்பிப்பார். அதே மாதிரி வந்தவர் அமர்ந்த பின்பு தான் அமர்வார். வருகிறவர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைத்துக்கொள்வது அவர் பழக்கம். அவர்களைப் பேசவிட்டு உன்னிப்பாகக் கவனித்துக் கேட்பார்.

08. பத்துப் பேர் உட்கார்ந்து பார்க்கக்கூடிய மினி தியேட்டர் வீட்டிலேயே இருக்கிறது. ஒரு படம் ரிலீஸாகி நல்ல வரவேற்பைப் பெற்றால் அந்தப் படத்தைக் கேட்டு வாங்கிப் பார்த்துவிட்டு சம்பந்தப்பட்ட படக்குழுவினரை சந்தித்துப் பேசுவார். படத்தின் அத்தனை அம்சங்களையும் குறிப்பிட்டுப் பேசிப் பாராட்டி அனுப்புவார். மகள் ஐஸ்வர்யா இந்தப் பணிகளை ஒருங்கிணைக்கிறார்.

09. கிருஷ்ணகிரி அருகே உள்ள நாச்சியார் குப்பம்தான் அவர் பெற்றோரின் பூர்வீக ஊர். அங்கு பெற்றோர் நினைவாக ஒரு மண்டபம் கட்டப்பட்ட போது அந்தப் பணிகளைப் போய்ப் பார்வையிட்டவர் அவரின் அண்ணன் சத்தியநாராயண ராவ் கெய்க்வாட்.

10. முன்பெல்லாம் கறுப்பு நிற உடைகளை விரும்பி அணிவார். இப்போது அதிகமாக வெள்ளைக்கு மாறி வருகிறார். வீட்டில் ஓய்வு நேரங்களில் காவி, கறுப்பு, நீலம் என கலர் வேட்டிகள் அணிகிறார். விருந்தினர் சந்திப்பின்போது தும்பைப்பூவாக எப்போதும் வெள்ளை வேட்டிதான்!



டோலிவுட் ஹீரோயினான ஸ்ரீலீலா மருத்துவம் படித்தவர். அவர் நடிக்கும் படங்களின் ஷூட்டிங்கின்போது யூனிட்டில் உள்ளவர்களுக்கு ஏதாவது உடல்நலக் குறைவு எனத் தெரிந்தால், உடனே முதலுதவி செய்கிறாராம், ஸ்ரீலீலா. ஒரு காலத்தில், இதே டோலிவுட்டில் டாக்டர் ராஜசேகர், தன்னுடைய படங்களின் ஷூட்டிங் ஸ்பாட்டில் இதுபோல் சிகிச்சைகள் செய்வார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சி-னி-மா



ஹிந்தி, தெலுங்கு, தமிழ் என ரவுண்டுகட்டி நடிக்கும் பூஜா ஹெக்டே, ரஜினியின் "கூலி"யில் ஒரு பாடலுக்கு ஆடுகிறார். அந்தப் பாடல் வீடியோ விரைவில் வெளியாகவிருக்கிறது. தமிழில் "ஜனநாயகன்", "காஞ்சனா 4" தவிர இந்தியில் இரண்டு படங்கள் என நடித்துவரும் பூஜா ஹெக்டே, இப்போது கன்னடத்தில் சுதீப் ஜோடியாக நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார். இதன் மூலம் கன்னடத்திலும் கால் பதிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

சுகமான விடியல் 452

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# நோயுற்றவர்களின் முன்னிலையில் எதிர்மறை உரையாடல்களைத் தவிர்ப்பது நல்லது

வைத்தியசாலை என்பது நோயாளிகள் உடல் மற்றும் உள ரீதியாக சிகிச்சை பெற்று குணமடைவதற்குரிய முக்கிய இடமாக விளங்குகின்றது. பொதுவாக மருத்துவமனையில்நோயாளி ஒருவர் அனுமதிக்கப்பட்டிருந்தால், அவரைப் பார்வையிடுவதற்கென்று அவரின் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் வருகை தருவதுண்டு. இவ்விதமான நோயாளர்களின் பார்வையாளர்களால், நோயாளர்களுக்கும் மற்றும் வைத்தியசாலைக்கும் சாதகமான, பாதகமான விளைவுகள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

அந்த வகையில் சாதகம் எனும் போது, நோயாளி மிக விரைவாகக் குணமடைவதற்கும் அவர்களது மன அழுத்தம் மற்றும் பதற்றம் என்பவற்றைக் குறைப்பதற்கும் நேரிய தாக்கத்தினை நோயாளியின் பார்வையாளர்கள் வழங்குகிறார்கள்.

சில சமயங்களில் சாதகம் என்பதை விடப் பாதகம் என்பதே அதிகமாகக் காணப்படுகிறது. அந்த வகையில் நோக்கினால், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள், சிகிச்சைகள் என்பவற்றிற்கு ஒரு குறிப்பிட்ட கால நேரம் என்று இருக்காது. எனவே, அந்தக் காலகட்டத்தில் நோயாளி குணப்படுவதற்கு ஓய்வும் மிக அவசியமாகக் காணப்படுவதோடு, ஓய்வு பெறுவதற்கென்றும் நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு இருப்பார். இந்தக் காலகட்டத்தில் நோயாளர்களை பார்வையிட வருபவர்களால் குறிப்பிடப்பட்ட சிகிச்சை முறைகள், பரிசோதனைகள் மற்றும் ஓய்வு என்பனவற்றுக்கு இடையூறு ஏற்படலாம்.

குறிப்பாக வடக்கு பிரதேசத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்கு பெருமளவிலான பார்வையாளர்கள் ஒரே நேரத்தில் வருகை தருவதனை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. அங்கு ஒரு நோயாளியின் கட்டிலைச் சுற்றி ஐந்துக்கு மேற்பட்ட பார்வையாளர்கள் இருப்பதனையும் காணக் கூடியதாக இருக்கின்றது. சில சமயங்களில் வைத்தியசாலை வைத்தியர்களோ, தாதியர்களோ நோயாளியை அவதானிக்க முடியாதவாறு, அவர்களை மறைத்துக் கொண்டு பார்வையாளர்கள் நிற்பதனையும் காணக் கூடியதாக இருக்கின்றது. அது போக, நம் வைத்தியசாலைகளில் இடப்பற்றாக்குறையினால், தரைகளில் தங்க வைக்கப்படும் நோயாளர்கள் அசௌகரியத்தையும் எதிர் கொள்கின்றனர்.

பொதுவாகவே நம் வைத்தியசாலைகளில் இட நெருக்கடி இருக்கும்போது, பார்வையிடும் நேரங்



களில் மேலும் இட நெருக்கடி அதிகரிப்பதோடு, அந்த நேரத்தில் நோயாளர்களின் சிகிச்சை நடவடிக்கைகளுக்காக வைத்தியர்களும் தாதியர்களும் நடமாடும் சமயத்தில் பெரும் தடங்கல்களையும் எதிர் கொள்கின்றனர்.

சில தருணங்களில் நோயாளி கடுமையாக நோய்வாய்ப்பட்டு அல்லது அவரது சுய நினைவை இழந்து இருக்கையில் அவருடைய பார்வையாளர்கள் அவரை பார்க்க முடியாமல் போகிறது. அந்த நேரத்தில் பார்வையாளர்கள் நோயாளியை காணச் செல்லும்போது சாதகமான தாக்கம் ஏற்படுவதிலும் பார்க்க, நோயாளிக்கு அவருடைய அதி தீவிர பராமரிப்பு முறைகளில் இடைஞ்சல்கள் ஏற்படுவதே அதிகமாக காணப்படுகிறது. இதன் காரணமாகவே அதிதீவிர சிகிச்சை பிரிவுகளில் பார்வையாளர்களை வைத்தியசாலை நிர்வாகம் கட்டுப்படுத்துகின்றது.

மேலும், மகப்பேறு விடுதிகளில் குழந்தை பிறந்தவுடன் குழந்தையைப் பார்ப்பதற்கு பெருமளவு பார்வையாளர்கள் வருகை தருகின்றனர். குறித்த குழந்தையின் தாய் தந்தையுடன் வேலை செய்யும் சக ஊழியர்கள் பெருமளவானோர் மகப்பேறு விடுதியில் அவர்களை பார்வையிடுவதற்காக வருகை தருகின்றனர். பிறந்த குழந்தைக்கு நோய் எதிர்ப்பு சக்தி குறைவாகக் காணப்படுவதால் பார்வையாளர்களினால் குழந்தைக்கு நோய் தொற்று ஏற்படுவதற்குரிய சாத்தியங்கள் மிக அதிகமாக காணப்படும்.

பொதுவாக சொல்லப்போனால் நோயாளர்களைப் பார்வையிட வரும் பார்வையாளர்களினால், நோயாளிகளுக்கும் வைத்தியசாலை நிர்வாகத்திற்கும் சாதகமான விளைவுகளை விடவும் பாதகமான விளைவுகளே அதிகமாகக் காணப்படுகின்றது. எனவே சாதக, பாதகங்களை ஏற்படுத்தும் நோயாளர்களின் பார்வையாளர்களினால் எவ்வாறு பாதக தாக்கங்களை குறைத்து சாதகமான விளைவுகளை ஏற்படுத்தி ஒரு நல்ல பார்வையாளராக நோயாளிக்கும், வைத்தியசாலைக்கும், சமூகத்திற்கும் நன்மை செய்யலாம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியது அவசியமாக காணப்படுகின்றது.

அந்த வகையில் நோக்கினால், பார்வையாளர் நேரத்தில் ஒருவரோ அல்லது இருவரோ நோயாளியை பார்க்க செல்லலாம். சில நோயாளிகளுக்கு பெருமளவு உறவினர்கள், நண்பர்கள் இருந்தாலும் கூட, இதனால் நோயாளிக்கும் பராமரிப்பாளர்களுக்கும் இடைஞ்சல் ஏற்படுவதனை எல்லோரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாவதோடு, இதை தவிர்ப்பதற்கு இருவர் இருவராக ஒரு சுழற்சி முறையில் உள்ளே செல்லலாம் என்பதனையும் இதை நோயாளியின் குடும்ப உறுப்பினருடன் தொடர்பு ஏற்படுத்தி ஒழுங்கு செய்துகொள்ள முடியும் என்பதனையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இதை விடவும் நோயாளிகளின் குடும்பத்தவரும் மன உளைச்சலுக்கு உள்ளாகியிருப்பார்கள். எனவே, நோயாளியின் குடும்பத்தினருக்கு தேவையான உதவிகளை அதாவது, நோயாளிக்கு தேவையான உணவு அல்லது குடும்பத்தினருக்கு தேவையான உணவு வழங்குதல், பிள்ளைகளின் பராமரிப்பு, வீட்டின் பாதுகாப்பு என்பன மூலம் நோயாளிக்கோ, குடும்பத்தினருக்கோ அனுசரணையாக இருக்க முடியும். இந்த முறையானது, ஒரு நோயாளியை பார்க்க வைத்தியசாலைக்கு செல்வதை விட, அவர்களுக்குப் பேருதவியாக இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

இவ்வாறு அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்து, பார்வையாளர்களாக வருகை தரும் உறவுகள் நோயாளிக்கோ, குடும்பத்தினருக்கோ தங்கள் அன்பையும் ஆதரவையும் வெளிப்படுத்த முடியும். (தொடரும்)

வைத்திய கலாநிதி
**எஸ். பிறேமகிருஷ்ணா**
உணர்வழியியல் சிகிச்சை நிபுணர்.
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்.

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



## ❖ 14,000 படைகள் ❖ ஏவுகணைகள் ❖ பெருமளவு வெடி பொருட்கள்

## ரஷ்யாவுக்கு அனுப்பியது வடகொரியா

### ஐ.நா குழு அறிக்கை




(பியாங்யாங்)

உக்ரைனின் நகரங்கள் மீது உக்கிர தாக்குதல்களை மேற்கொள்வதற்கு ரஷ்ய படையினர் வடகொரியாவின் ஆயுதங்களை பயன்படுத்துகின்றனர் என ஐநா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா பிரிட்டன் உட்பட 11 நாடுகள் இடம்பெற்றுள்ள தடைகள் குறித்த ஐநா குழு தனது அறிக்கையில் இதனை தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 2023 இற்குப் பின்னர் வடகொரியா ரஷ்யாவிற்கு 20000 கொள்கலன் வெடிமருந்துகளை வழங்கியுள்ளது என தடைகள் குறித்த ஐநா குழு தெரிவித்துள்ளது.

ஆட்டிலறிகள் ஆர்ஜிபிக்களுக்கான 9 மில்லியன் வெடிபொருட்களை வடகொரியா ரஷ்யாவிற்கு வழங்கியுள்ளது என தெரிவித்துள்ள இந்த குழுவினர் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் தீர்மானங்களை மீறி ரஷ்யாவும் வடகொரியாவும் தங்களின் பாதுகாப்பு ஒத்துழைப்பை மேலும் ஆழமாக்கவுள்ளன என தெரிவித்துள்ளது.

உக்ரைன் நகரங்கள் மீது தாக்குதலை மேற்கொள்வதற்கான ரஷ்யாவின் வலுவை அதிகரிப்பதற்கு வடகொரியா உதவியுள்ளது. உக்ரைனின் உட்கட்டமைப்புகள் மீது ரஷ்யா தாக்குதலை மேற்கொள்வதற்கான வலுவை வடகொரியா அதிகரித்துள்ளது என ஐநா குழு தெரிவித்துள்ளது.

செப்ரெம்பர் 2023 இல் ரஷ்யாவிற்கு வெடிபொருட்களை அனுப்ப ஆரம்பித்தது முதல் வடகொரியா 100 கண்டங்களிற்கு இடையிலான ஏவுகணைகளை அனுப்பியுள்ளது என இந்த ஐநா குழு தெரிவித்துள்ளது.

கடல்வழியாகவும் ஆகாயமார்க்கமாகவும் புகையிரதத்தின் ஊடாகவும் வடகொரியா இந்த ஆயுதங்களை அனுப்புவதாக ஐநா குழுவினர் தெரிவித்துள்ளனர். (நி-8)

## ஐ.நா. கூட்டத்தில் கதறி அழுத பாலஸ்தீன தூதர்

### மனதை உலுக்கிய உரை



(ஜெனீவா)

ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் பாலஸ்தீனிய தூதர் ஒருவர் கதறி அழுத விடயம் தற்போது சர்வதேச மட்டத்தில் பேசு பொருளாக மாறியுள்ளது.

பாலஸ்தீனிய தூதர் ரியாத் மன்சூர் என்பவரே இவ்வாறு அழுதுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல் இராணுவம் பாலஸ்தீனத்தின் காசா மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றது.

இதனால் அங்குள்ள மக்கள் தொடர்ந்து வெளியேறி வருகின்றனர்.

சமீபத்தில் வெளியான தகவலின்படி உணவு மற்றும் மருந்துக்கு பற்றாக்குறை இருப்பதாகவும், உணவு வாகனங்கள் செல்வதற்கு இஸ்ரேல் அனுமதி அளிக்க வேண்டும் என கோரப்பட்டது.

உணவு வாகனங்கள் செல்லாவிட்டால் பல ஆயிரம் குழந்தைகள் இறக்க நேரிடும் என தகவல் வெளியானது. இந்தநிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் பேசிய பாலஸ்தீனிய தூதர் ரியாத் மன்சூர், காசாவில் குண்டுவெடிப்பு, தீப்பிழம்பு, பசி, பட்டினி ஆகியவற்றின் நடுவே மக்கள் தவிப்பதாக தெரிவித்துள்ளார்.

அப்போது மனம் உடைந்து கதறி அழுத அவர், தனக்கும் பேரக் குழந்தைகள் இருப்பதாகவும் காசா குழந்தைகளின் நிலையைப் பார்க்க முடியவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், காசாவின் குழந்தைகள் அண்டை நாடுகள் உள்ளிட்ட இடங்களிலும், அகதிகள் முகாமிலும் வாழ்வதைப் பார்க்க முடியவில்லை என வேதனையுடன் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

## 75 % பனிப்பாறைகளை இழக்கும் அபாயத்தில் இந்துகுஷ் இமயமலை



(காபூல்)

சுமார் இரண்டு பில்லியன் மக்களுக்கு முக்கியமான நீர் ஆதாரமான இந்துகுஷ் இமயமலை, இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் உலக வெப்பநிலை அதிகரிப்பு காரணமாக அதன் பனிப்பாறை பனியில் 75% வரை இழக்க நேரிடும் என்று ஒரு புதிய அறிவியல் ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

இந்த அப்பட்டமான கணிப்பு, பிராந்தியத்தின் பாதிப்பு மற்றும் ஆசியா முழுவதும் நீர் பாதுகாப்பிற்கான நீண்டகால விளைவுகளை எடுத்துக் காட்டுகிறது.

முன்னணி இதழ் ஒன்றில் வெளியிடப்பட்ட இந்த கண்டுபிடிப்பு, வலுவான காலநிலை நடவடிக்கைக்கான அவசரத் தேவையை எடுத்துக்காட்டுகின்றன.

பாரிஸ் ஒப்பந்தத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளபடி, வெப்பமயமாதலை 1.5 டிகிரி செல்சியஸாகக் கட்டுப்படுத்துவதில் நாடுகள் வெற்றி பெற்றால், இமயமலை மற்றும் காகசஸில் உள்ள பனிப்பாறை பனியின் 40-45% பாதுகாக்கப்படலாம் என்று ஆய்வு மதிப்பிடுகிறது.

உலகளவில், இது தற்போதைய பனிப்பாறை அளவில் 54 சதவீதத்தை இது தக்க வைத்துக் கொண்டுள்ளது.

நூற்றாண்டின் இறுதிக்குள் உலகம் 2.7 டிகிரி செல்சியஸ் வெப்பமயமாதலை நோக்கிய அதன் தற்போதைய பாதையில் தொடர்ந்தால், இது வெறும் 24% ஆக மாறும்.

மனித சமூகங்களுக்கு இன்றியமையாத பனிப்பாறைப் பகுதிகளான ஐரோப்பிய ஆல்ப்ஸ், வட அமெரிக்காவின் ராக்கி மலைகள் மற்றும் ஐஸ்லாந்து உள்ளிட்டவையும் வெப்பமயமாதல் பிரச்சினையால் ஆபத்தில் உள்ளன.

2 டிகிரி செல்சியஸ் வெப்பமயமாதலில், இந்தப் பகுதிகள் கிட்டத்தட்ட அனைத்து பனியையும் இழக்க நேரிடும் என்றும் கூறப்படுகிறது. (நி-8)

## எமது கோரிக்கைகளை அமெரிக்கா கருத்தில் கொள்ளவில்லை

### ஹமாஸ் அமைப்பு தெரிவிப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்கா முன்வைத்துள்ள யுத்தநிறுத்தத் திட்டம் தமது வேண்டுகோள்களை நிறைவேற்ற தவறியுள்ளது என தெரிவித்துள்ள ஹமாஸ் அமைப்பு எனினும் அதனை ஆராய்ந்து வருவதாக தெரிவித்துள்ளது.

யுத்தத்தை முடிவிற்கு கொண்டுவருவது, உட்பட முக்கிய வேண்டுகோள்களிற்கு அமெரிக்க தீர்வு திட்டத்தில் எந்த பதிலும் இல்லை என ஹமாசின் சிரேஷ்ட அதிகாரியொருவர் சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார். எனினும்விரைவில் பதிலளிக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் யுத்த நிறுத்த திட்டம் இஸ்ரேலின் நிலைப்பாட்டை பிரதிபலிக்கின்றது என தெரிவித்துள்ள ஹமாஸின் சமி அபு ஜுஹ்ரி யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வருவது, இஸ்ரேலிய படையினரை விலக்கிக்கொள்வது போன்ற விடயங்கள் குறித்து எதுவும் குறிப்பிடப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

காசாவில் அறுபது நாள் யுத்த நிறுத்தம் பணயக் கைதிகள் விடுதலை உட்பட பல யோசனைகளை உள்ளடக்கிய 60 நாள் யுத்த நிறுத்த திட்டமொன்றை அமெரிக்கா முன்வைத்துள்ளது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தூய்மை நீரான் அமையும்; அகந்தூய்மை வாய்மையால் காணப்படும். – திருக்குறள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாவதும்...

உண்மைகள் ஒருபோதும் உறங்குவதில்லை. காலத்துக்குக் காலம் இயற்கை உண்மைகளை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும்.

எனினும் உண்மை மறைந்துவிடும் எனப் பலர் நினைக்கின்றனர்.

அதேநேரம் ஒரு பொய்யை ஆயிரம் தடவைகள் கூறினால் அது உண்மையாகிவிடும் என்றும் இத்தகையவர்கள் கருதுகின்றனர்.

இங்குதான் அவர்கள் மகா தவறு இழைக்கின்றனர்.

ஆம், உள்ளது இல்லதாகாது. இல்லது உள்ளதாகாது எனும் சற்காரியவாதம் உண்மைகள் உண்மைகளே என்பதைச் சான்றுப்படுத்தி நிற்கின்றது.

இஃது ஒருபுறமிருக்க, உண்மைகள் அவ்வப்போது வெளிப்படுகையில் அதனை உரியவாறு மகிமைப்படுத்த வேண்டும். அதைச் செய்யத் தவறும்போது குறித்த உண்மைகள் தன்னை மீளவும் வெளிப்படுத்தும் பொருட்டு பல்வேறு சிக்கல்களை – குழப்பங்களை ஏற்படுத்தும்.

ஆம், இந்த நாட்டின் சுகாதார அமைச்சராக இருந்த ராஜித சேனாரத்ன அவர்கள் ஒரு முக்கியமான விடயத்தைப் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

அதாவது, வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த யுத்தத்தின்போது தமிழ் இளைஞர்கள் பலர் ஒரு குறித்த வாவியில் உள்ள முதலைகளுக்கு இரையாக்கப்பட்டனர் என்பதே அவர் கூறிய விடயம்.

ராஜித சேனாரத்ன கூறிய அந்த விடயத்தை எங்கள் தமிழ் அரசியல் தலைவர்கள் தூக்கித் துலாம்பரப்படுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் அவர்கள் அதைச் செய்யவே இல்லை.

தவிர, முதலைகளுக்கு இரையாக்கப்பட்டவர்கள் தமிழ் இளைஞர்கள் என்பதாலோ என்னவோ எதிர்க்கட்சி வரிசையில் இருந்த சிங்கள அரசியல்வாதிகளும் மௌனம் காத்தனர்.

அதேபோன்று தமிழ் மக்கள் துன்பப்பட்டபோதெல்லாம் குரல் கொடுக்க மறுத்த முஸ்லிம் தலைமைகள் இது விடயத்திலும் தமது மௌனத்தைத் தொடர்ந்தனர்.

ஆனாலும் ராஜித சேனாரத்ன கூறிய அந்த உண்மை இப்போதும் இப்பிரபஞ்சத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.

இது விடயத்தில் அநுர அரசாங்கம் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று தமிழ் மக்கள் வலியுறுத்துகின்ற இந்த வேளையில், மற்றுமோர் உண்மை வெளிப்பட்டுள்ளது.

ஆம், விடுதலைப் புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்க நகைகளில் சுமார் 110 கிலோ தங்க நகைகளை பசில் ராஜபக்ஷ அபகரித்து விட்டார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

ஆக, ராஜித மற்றும் சரத் பொன்சேகா ஆகியோர் உரைத்த உண்மைகளை அநுர அரசு வெளிப்படுத்தினால் மட்டுமே இலங்கைத் திருநாட்டில் மகா இலக்குமி குடியிருப்பாள். இல்லையேல் அறம் கூற்றாகும் கவனம்.

## உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க அரச பதவிகளை பங்கிடுவதும் குற்றமே

### அரசை எச்சரிக்கிறது ஐ.ம.சக்தி

(கொழும்பு)

இலஞ்ச, ஊழல் சட்டத்துக்கமைய உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைப்பதற்கு அரச பதவிகளை அரசாங்கம் பரிந்துரைக்குமாயின் அதுவும் குற்றமாகும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நேற்று சனிக்கிழமை (31) இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் இது குறித்து மேலும் கருத்துரைக்கையில்,

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அரசாங்கத்துக்கு காணப்பட்ட மக்கள் ஆணை இல்லாமல் போயுள்ளமை உறுதியாகியுள்ளது. அரசாங்கம் 23 இலட்சம் வாக்குகளை இழந்திருக்கிறது.

அரசாங்கத்துக்கு 50 சதவீத வாக்குகள் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மையைப் பெற்றுள்ள தரப்பினருக்கு ஆட்சியமைப்பதற்கு வாய்ப்பளிக்கப்பட வேண்டும். 2ஆம் திகதி உள்ளூராட்சிமன்றங்களின் பதவிக்காலம் ஆரம்பமாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் பதவி நியமனங்கள் உள்ளிட்டவை தொடர்பில் நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிச்சயமற்ற நிலைமைக்குள் ஊழலுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளன. பெரும்பான்மை அற்ற உள்ளூராட்சி மன்றங்களில் 50 சதவீதத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுக்களுடன் அரசாங்கம் பேரம் பேசிக் கொண்டிருக்கிறது. அது மாத்திரமின்றி பல்வேறு சிறப்புரிமைகளும் அரசாங்கத்தால் பரிந்துரைக்கப்படுகின்றன. தற்போதுள்ள இலஞ்ச, ஊழல் சட்டத்துக்கமைய பணம் மாத்திரமின்றி வேறு எந்த வகையிலும் வழங்கப்படும் சலுகைகள், சிறப்புரிமைகள், பதவிகளும் தண்டனைக்குரிய குற்றமாகும்.

அவற்றை வழங்குபவர்களைப் போன்றே பெறுபவர்களும் சட்டத்தின் முன் குற்றவாளிகளாவர். மஹிந்தானந்த மற்றும் நளின் பெர்னாண்டோவுக்கு தண்டனை வழங்கப்பட்டமை மகிழ்ச்சிக்குரியது.

ஆனால் அந்த சட்டம் அரசாங்கத்துக்கும் பொதுவானது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம் என்றார். (ம-4,7)

## 2026ம் ஆண்டுக்கான விடுமுறைகள் தொடர்பில் வர்த்தமானி வெளியீடு

2026 ஆம் ஆண்டிற்கான அரச மற்றும் வங்கி விடுமுறைகள் தொடர்பான பட்டியல் அடங்கிய வர்த்தமானியை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

கடந்த 27ஆம் திகதி வர்த்மானி அறிவித்தலொன்றை வெளியிட்டு அரசாங்கம் விடுமுறை தொடர்பான விபரங்களை அறிவித்துள்ளது.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஏ.எச்.எம்.எச். அபயரத்ன, 1971 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விடுமுறைச் சட்டத்தின் பிரிவு 04 இன் கீழ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## துவிச்சக்கரவண்டியை மோதித் தள்ளிய டிப்பர் முதியவர் ஒருவர் பலி

(திருகோணமலை)

திருகோணமலை ஆலங்கேணிப் பாரதிபுரத்தில் நேற்று முன்தினம் மாலை இடம் பெற்ற டிப்பர் வாகன விபத்தில் முதியவரொருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

துவிச்சக்கரவண்டியில் பயணித்த குறித்த முதியவர் மீது டிப்பர் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த அவர் கிண்ணியா தளவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று (31) உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-4,7)

## இளைஞனின் துணிகரச் செயலால் தலைதெறிக்க ஓட்டம் பிடித்த வழிப்பறிக் கொள்ளையர்கள்

(மானிப்பாய்)

மானிப்பாய்ப் பகுதியில் அண்மைக்காலமாக வழிப்பறிக்கொள்ளைச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் தன்னிடம் வழிப்பறியில் ஈடுபட முனைந்தவர்களை இளைஞன் ஒருவர் அவர்களது ஆயுதத்தைப்பயன்படுத்தியே துரத்தியடித்த துணிகரச் சம்பவம் ஒன்று நேற்றிரவு இடம்பெற்றுள்ளது.

மானிப்பாய் கட்டுடைச் சந்தியில் இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவரை வழிமறித்த இருவர் இளைஞனின் கைப்பையைத் தருமாறு மிரட்டியுள்ளனர்.

இளைஞன் மறுக்கவே தம்மிடமிருந்த கத்தியை எடுத்துக்காட்டி இளைஞனுக்கு அச்சமூட்டி அவரது கைப்பையை பறிக்க முனைந்துள்ளனர்.

இதில் இளைஞன் சிறுகாயங்களுக்கும் உள்ளாகியுள்ளார்.

இருப்பினும் சமயோஜிதமாக செயற்பட்ட இளைஞன் தற்துணிவுடன் வழிப்பறிக் கொள்ளையர்களின் கத்தியைப் பறித்து அவர்களை கையுங்களவுமாகப் பிடிக்க எத்தனித்த வேளை இதை சற்றும் எதிர்பாராத கொள்ளையர்கள் தமது மோட்டார் சைக்கிளையும் கைவிட்டுத் தப்பியோடியுள்ளனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மானிப்பாய்ப் பொலிஸார் வழிப்பறிக் கொள்ளையரின் மோட்டார் சைக்கிளை பொலிஸ் நிலையம் எடுத்துச் சென்றதோடு மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர். (ம-க-4,7)

## நிபந்தனைகளற்ற ஆதரவை கோரும் தமிழரசுக் கட்சி

### சுரேஸ் பிரேமச்சந்திரன் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைக்க இலங்கைத் தமிழரசுக்கட்சியானது நிபந்தனைகள் இன்றி தமக்கு ஆதரவினை வழங்குமாறு கூறுவதாக ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரியப்படுத்தியுள்ளார். அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியின் பதில்தலைவர் சி.வி.கே. சிவஞானம் அவர்கள், ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது, குறைந்தபட்சம் கூட அவர்களுக்கு எந்தவொரு இடத்தையும் விட்டுக் கொடுக்க முடியாது.

எந்தவிதமான நிபந்தனைகளுமின்றி ஆதரவு தெரிவிக்க வேண்டும். மாற்றீடாக நாங்கள் எதுவும் செய்ய முடியாது என்ற கருத்தையே ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவரான தர்மலிங்கம் சித்தார்த்தனிடம் கூறியுள்ளார்.

ஆகவே அவர்களைப் பொறுத்தவரையில் எந்தவிதமான கேள்வி நியாயங்கள் இல்லாமல், அவர்கள் கேட்கின்ற ஆதரவுகளைக் கொடுத்தால் போதுமானது என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர் என்றார்.(ம-4,7,104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தருமபுரம் வைத்தியசாலையில் பௌதீக வளங்கள் இருந்தும் சிகிச்சைகளைப் பெறமுடியாத நிலை!

## நோயாளர்கள் கவலை

**(தருமபுரம்)**

**போதிய கட்டட வசதிகள் இருந்தும் சிகிச்சையினை முழுமையாகப் பெறமுடியாத நிலையில் உள்ளதாக நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவில் உள்ள தருமபுரம் வைத்திய சாலையில் போதிய அளவிலான புதிய கட்டட வசதிகள் இருக்கின்ற போதிலும் மக்களுக்கான சிகிச்சையினை முழுமையாக பெறமுடியாத நிலையில் உள்ளதாக நோயாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தருமபுர வைத்திய சாலையை நம்பி இருபத்தி ஒரு கிராமங்களுக்கு அதிகமான கிராம மக்கள் தமது வைத்திய சேவையினை தருமபுர வைத்திய சாலையிலேயே பெற்று வருகின்றனர். இருப்பினும் தருமபுர வைத்திய சாலையில் ஒரே ஒரு வைத்தியரால் மாத்திரமே நாளாந்தம் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றது.


இங்கு சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் ஒரு நாள் பொழுதை வைத்திய சாலையிலேயே கழிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாளாந்தம் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், கிளினிக் நோயாளர்கள், அவசர சிகிச்சைக்கு வரும் நோயாளர்கள் அனைவரையும் தற்பொழுது கடமையாற்றிக் கொண்டிருக்கும் ஒரே ஒரு வைத்தியரே சிகிச்சை அளித்து வருகின்றார்.

கடந்த 2009 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு முன்னர் தருமபுர வைத்தியசாலையில் மகப்பேற்று வசதி, குருதி பரிசோதனை, அவசர சிகிச்சைப் பிரிவு என பல சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்தது. தற்பொழுது ஒரு குருதி பரிசோதனை செய்வதாயின் கிளிநொச்சி வைத்திய சாலைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே தருமபுர வைத்தியசாலையை தரம் உயர்த்தி சிறந்த சிகிச்சை வழங்குவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்(8-316)

# 'வவுனியாவின் குரல் 2025' இறுதிப் போட்டி நிகழ்வு







(வவுனியா)

வவுனியாப்பிரதேச செயலகமும் பிரதேச கலாசார பேரவையும் இணைந்து வவுனியா இசை ஆர்வலர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் முகமாக "வவுனியாவின் குரல் 2025" என்ற நிகழ்வை நடத்தியிருந்தது.

அதற்கான முதல்சுற்றுப் போட்டிகள் கடந்தவாரம் ஆரம்பித்த நிலையில் நேற்று முன்தினம் இறுதிப் போட்டி நிகழ்வுகள் இடம் பெற்றிருந்தது.

இரு பிரிவுகளாக இடம் பெற்ற இப்போட்டியில் 18 வயதிற்குட்பட்ட பிரிவில் முதலாம் இடத்தை சதீசன் சுருதியும்,இரண்டாவது இடத்தை சந்திரகுமார் ரொசானியும், மூன்றாம் இடத்தை யோகநாதன் கிர்ஸ்சாத் ஆகியோரும் பெற்றுக் கொண்டனர்.

மேற்பிரிவில் முதலாம் இடத்தை மகேந்திரன் சிவசக்தி, இரண்டாம் இடத்தை சாந்தரூபன் கலாரஜினி, மூன்றாம் இடத்தை அல்போனஸ் மெலிஸ்ரன், செபஸ்ரியான் வினோஜன் ஆகிய இருவர் பெற்றுக் கொண்டனர்.இறுதிப்போட்டி நிகழ்வில் வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் நா.கமலதாசன், பிரதேச செயலாளர் இ.பிரதாபன், உதவி பிரதேச செயலாளர் பு.உமாநந்தினி, கலாசாரஉத்தியோகத்தர் க.அபிராமி,அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.துஜான் உட்பட உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டிருந்தனர்.(8-250)

# வண்டு மொய்த்த உணவுப்பொருட்கள் உரிமையாளருக்கு 7500 ரூபா தண்டம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு இரணைப்பாலைப் பகுதிகளில் சுகாதார சீர்கேடான முறையில் இயங்கிய வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்களுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

இரணைப்பாலையில் உள்ள வர்த்தக நிலையங்கள் சுகாதார சீர்கேடான முறையில் இருப்பதாக கிடைக்கப்பெற்ற பொதுமக்களின் முறைப்பாட்டினையடுத்து பொது சுகாதார பரிசோதகர்களினால் அந்தப் பகுதியில் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது ஒரு வர்த்தக நிலையத்தில் காலாவதியான வண்டுமொய்த்த உணவுப் பொருட்கள் கைப்பற்றப்பட்டன. அதனையடுத்து குறித்த நிலைய உரிமையாளர்கள் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போது அவருக்கு 7500 ரூபாய் தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன் இரணைப்பாலை பகுதியில் பிளாஸ்டிக் பொருட்கள், பொலித்தீன் பைகள் மற்றும் ஏனைய கழிவுப் பொருட்கள் வீதியோரங்களில், வாய்க்கால்களில் வீசிய வர்த்தகருக்கு எதிராகவும் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த நிலையில் குறித்த வர்த்தகருக்கு எதிராக 25,000 ரூபா தண்டப்பணம் விதிக்கப்படிருந்தது.

இந்தச் சோதனையை கோம்பாவில் சுகாதார பரிசோதகர் ஆ.சுரேஸ் ஆனந்தன், புதுக்குடியிருப்பு பொது சுகா தார பரிசோதகர் [illegible] இணைந்து மேற்கொண்டிருந்தனர்.(8-299)


# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

01.06.2019 அன்று சிவபதமடைந்த

கொடைவள்ளல்

**கந்தையா கிருஷ்ணன்**

(ஓய்வு நிலை-சிறப்பு நிலை தபால் அதிபர்- சிங்கப்பூர்)

தாய் மடியில் 17.10.1917

இறைவன் அடியில் 01.06.2019



கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப்போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந் நாளும் உயிர் வாழும்
மண்விட்டு மறைந்து- நீங்கள் விண்ணோக்கிச் சென்று
ஆறாண்டு சென்றாலும் கண்விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.

01.06.2025 இன்று குப்பிழான் சிவபூமியில் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் மதிய உணவும் வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கப்படும்.

(4416)

பிள்ளைகள் சார்பில் - திரு.ஜெயதாசன் கிருஸ்ணன் (சிங்கப்பூர்)

குப்பிழான் மக்கள் சார்பில்:-
திரு.தில்லைநாதன் இரவீந்திரநாதன் M.A
(அகில இலங்கை சமாதான நீதவானும் ஓய்வு நிலை அதிபரும்)
திரு.தில்லையம்பலம் சசிதரன் (ஆசிரியர்- யா/இராமநாதன் கல்லூரி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடிகாமத்தில்...

சிறிது காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இளைஞனே மனவிரக்தியில் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,4,30)

## தமிழீழ விடு...

மானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

இதன்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம், தமிழர் புனர்வாழ்வு அமைப்பு, தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, உலக தமிழர் இயக்கம், நாடு கடந்த தமிழீழ அரசு, உலக தமிழர் நிவாரண நிதியம், கனேடிய தமிழர் தேசிய அவை மற்றும் தமிழ் இளையோர் அமைப்பு ஆகியன இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் எச்சிபூ என்று அறியப்படுகின்ற தலைமையகக் குழு, தேசிய தௌஹீத் ஜமாத், ஜமாதே மிலாதே இப்ராஹிம், விலாயத் அஸ் செயிலானி, டருள் ஆதர் அத்துபவியா, இலங்கை இஸ்லாமிய மாணவர் ஒன்றியம் மற்றும் சேவ் த பேர்ளஸ் ஆகியனவும் இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன. (ம-7,4)

## புலிகளின்...

கிய நேர்காணல் ஒன்றிலேயே இந்த விடயம் குறித்து அவர் பேசியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

"விடுதலைப் புலிகள் நடத்திய வங்கிகளில் அப்பகுதி மக்களால் அடகு வைக்கப்பட்ட 220 கிலோ தங்க நகைகள் மீட்கப்பட்டிருந்தன.

அவை அனைத்தும் பல பொலித்தீன் பைகளில் வைக்கப்பட்டிருந்ததோடு அவற்றை அடகு வைத்தவர்கள் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருந்தன.

இதனையடுத்து, தங்க நகைகள் அனைத்தும் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. அதன் பின்னர் என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது.

அத்துடன் 110 கிலோ தங்க நகைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பசில் ராஜபக்ஷவும் கூறினார். இதன் பொருள் கிடைத்த தங்க நகைகளில் அரைவாசியை அவர் எடுத்துக்கொண்டார் என்பதாகும்.

நான் இராணுவத்திலிருந்து விலகிய பின்னரும் இதுபோன்று தங்க நகைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ராஜபக்ஷ குடும்பத்தினர் 6 டொன் தங்க நகைகளை ஜப்பான் நாட்டிற்கு விற்பனை செய்ததாகவும் ஒரு செய்தி எனக்குக் கிடைத்தது" எனத் தெரிவித்துள்ளார். (ம-7,4)

## தமிழக அகதி...

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

சட்டபூர்வமற்ற வழிகள் ஊடாக நாட்டைவிட்டு வெளியேறியவர்களிற்கு எதிராகப் பயன்படுத்தப்படும் சட்டத்தின் அடிப்படையிலேயே தமிழக அகதி முகாமிலிருந்து நாடு திரும்பிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். தொடர்புபட்டவர்கள் இது குறித்து செயற்பட்டிருந்தால் யுத்தத்தின் பின்னர் இந்தச் சட்டத்தை மாற்றியிருக்கலாம்.

அமைச்சர் ஆனந்த விஜயபாலவுடன் கதைத்தேன். அவர் இந்தச் சட்டத்தை மாற்றுவதாகத் தெரிவித்துள்ளார். இது அரசாங்கக் கொள்கையில்லை, நாட்டின் பழைய சட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றார். (ம-7,4)

## பூநகரியில்...

இனந்தெரியாதவர்கள் வழிமறித்து வாளால் சரமாரியாக வெட்டியதில் இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பூநகரி பொலிஸார் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4,316)

## வடக்கில்...

கின்றது. இது எமக்கு ஆபத்தான நிலைமை. அனைவரும் இதனைக் கவனத்திலெடுக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கோரிக்கை விடுத்தார்.

குரும்பசிட்டி பொன்.பரமானந்தர் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும், "பரமானந்தம" மலர் வெளியீடும் பாடசாலை அதிபர் க.வசந்தரூபன் தலைமையில் நேற்றுச் சனிக்கிழமை காலை நடைபெற்றது.

அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

இன்றும் எங்கள் இளம் சமூகத்திடம் வெளிநாட்டு மோகம் தொடர்ந்தும் இருக்கின்றது. இங்கிருந்து முன்னேறுவோம் என்ற எண்ணம் இல்லை. வடக்கில் உள்ளதைப்போன்று வளங்கள் வேறு எங்கும் இல்லை. இப்படியான வளங்கள் இருந்தும் நாம் அதனைப் பயன்படுத்தவில்லை.

முல்லைத்தீவைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களை அண்மையில் நான் கௌரவித்திருந்தேன். அவர்கள் விவசாயத்தில் சாதித்தவர்கள். அவர்கள் இங்கிருந்து தம்மால் மிகச் சிறந்த தொழில்முனைவோராக வரமுடியும் என்று கூறினார்கள். அப்படி இங்கிருந்து சாதிக்க இளையோர் எதிர்காலத்தில் முனைய வேண்டும் என்றார். (ம-7,4)

## பெயர்...

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலுள்ள உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களுக்கான உறுப்பினர்களின் பெயர்கள் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏனைய மாவட்டங்களுக்கான உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவாகியுள்ள உறுப்பினர்களின் பெயர்களும் விரைவில் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படவுள்ளது. (ம-7,4)

## காணா...

ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் மக்கள் மாதந்தோறும் மாபெரும் போராட்டம் ஒன்றை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையிலே முல்லைத்தீவு மாவட்டத்திலே மேற்கொள்ளப்படுகின்ற இந்தப் போராட்டம் தொடர்ச்சியாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் மேற்கொள்வதற்காகத் தீர்மானித்திருந்தனர்.

அந்தவகையில் துணுக்காய், மாந்தை கிழக்கு, மாங்குளம் பகுதிகளைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து நேற்று மாங்குளம் நகரில் குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

தமது உறவுகளுக்கான நீதி இலங்கையில் கிடைக்காது எனவும் சர்வதேசத்தின் ஊடாகவே தமக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கோரி, இந்த மக்கள் தொடர்ச்சியாகப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற நிலைமையில் நேற்றுக் காலை மாங்குளம் நகரில் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள், மதத்தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். (ம-7,4,299)


மஹஜன சம்பத — திகதி 2025.05.31 — சீட்டிழுப்பு இலக்கம் 5846 — D 2 7 6 9 7 3
அத சம்பத — D 6 9 7 3 — சீட்டிழுப்பு இலக்கம் 0421

தன நிதானய — திகதி 2025.05.31 — சீட்டிழுப்பு இலக்கம் 1876 — E 21 40 50 69 E — 98833

மெகா பவர் — திகதி 31/05/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2194 — J 01 22 27 30 74

ஜய — திகதி 2025.05.31 — சீட்டிழுப்பு இலக்கம் 114 — D 3 5 2 3

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4088 — சீட்டிழுப்பு திகதி 31.05.2025 — S 24 55 70 80 — S

ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2025.05.31 — சீட்டிழுப்பு இலக்கம் 1155 — கும்பம் 18 27 29 46 கும்பம் — 38046 — 30

உத்தியோகபூர்வ முடிவுகள் — திசிர திசிர சம்பத — 31.05.2025 — வெற்றி வாரம் 554 — X 7 5 7 8 2 6 — 53011 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,270,975.60

சுப்பர் போல் — சீட்டிழுப்பு வாரம் 2820 — சீட்டிழுப்பு திகதி 2025.05.31 — தினம் சனிக்கிழமை — 09 11 12 37 I — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,333,916.00

சனிதா — திகதி 31.05.2025 — வெற்றி வாரம் 4981 — 02 13 55 74 Q — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,624,397.60 — 74031

சசிரி — வெற்றி வாரம் 694 — 31.05.2025 — சனிக்கிழமை — 22 25 30 — ரூ.200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4532 — சீட்டிழுப்பு திகதி 31.05.2025 — தினம் சனிக்கிழமை — 01 02 44 52 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,615,060.00 — 126222

கப்ருக — U 32 05 07 20 51 — 1996 — 31.05.2025 — சனிக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.576,634,490.20

அத கோட்டிபதி — சனிக்கிழமை — வெற்றி வாரம் 2646 — சீட்டிழுப்பு திகதி 2025.05.31 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,943,926.40 — 05 10 15 56 O — 759650


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery

UK 11Kg - 1420/- France 11Kg - 2220/- Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- Australia 11Kg - 1980/- Italy 11Kg - 2250/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், பண்டத்தரிப்பு, கொழும்பு, சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர், சங்கானை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-3088)



## Village Hotel
**Bus Booking (A/C Bus)**

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503
(3892)



## வீடு வாடகைக்கு தேவை

இருவர் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு (வங்கி உத்தியோகத்தர்) யாழ் நகரத்திலிருந்து 3 Km தூரத்திற்குள் வீடு வாடகைக்குத் தேவை.
வீடு நன்றாக பராமரிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
075 235 9254
(1182)



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1989ம் ஆண்டு பரணி நட்சத்திரம், கிரகபாவம் 22, செவ்வாய் 8 இல் உள்ள நிரந்தரமாக அரச திணைக்களத்தில் தொழில் புரியும் (HNDIT) மணமகனுக்கு மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :
077 864 9878, 077 634 3103
(1174)



## காணி விற்பனைக்கு

நாவற்குழி உணவுக் களஞ்சியத்தின் மேற்கு வாசலுக்கு எதிராக அமிர்தா வீதியில் 40 பரப்புக் காணி விற்பணைக்குண்டு.

விபரங்களுக்கு :
074 140 0693
(4415)



## காணி விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் 2 பரப்புக் காணி 4 பக்க சுற்று மதில், பொளி கல்லுக் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு. நல்ல அயல் சூழலுடன் அமைந்த அனைத்து வசதிகளையும் இலகுவாக பெறக்கூடிய இடம்.

077 358 2704
(4425)



## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் ஊரெழுவில் பலாலி வீதிக்கு அருகாமையில் 14 பரப்பு காணி விற்பனைக்கு 18 அடி பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில்**

- பலாலி வீதி, ஊரெழுப் பிள்ளையார் கோவில் முன் வீதி 150m தூரத்தில்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம், செம்மண் காணி
- குடியிருப்புகள் சூழவுள்ள காணி
- ஒரு பரப்பின் விலை இருபத்தி ஐந்து இலட்சம் ரூபாய் 2500000/= மட்டுமே
- பார்வையிடும் நேரம் காலை 8 மணி முதல் 6 மணி வரை

தொடர்புகளுக்கு :
076 739 0413, 077 623 4204
(4437)



## Happy Supermarket - உரும்பிராய்


| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 215/= Max 3Kg | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 255/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 415/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 240/= | |
| 1Kg ஈக்குத்தீட்டல் | - 215/= | |
| 1Kg கடலை | - 390/= | |
| 10Kg விஜிதா | - 2800/= | |
| 1Kg வெள்ளை உளுந்து | - 790/= | |
| 1.5 L பெப்சி | - 339/= | ~~400/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~80/=~~ |
| 400g லக்ஸ்பிறே | - 1030 | ~~1100/=~~ |
| 200g சமபோஷ | - 165/= | ~~185~~ |
| 350g கோழி நூடில்ஸ் | - 120/= | ~~200/=~~ |
| 01 டசின் தீப்பெட்டி | - 160/= | ~~240/=~~ |

400g Anchor 1040/= ~~1100/=~~
1Kg சன்லைட் பவுடர் 280/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.
(1188)
Happy Supermarket
0777 8080 30


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## திரு. மார்க்கண்டு சிவசுப்பிரமணியம் (இ.மா.சி)

(ஓய்வு நிலை ஆசிரியர் - கொக்குவில் இந்துக் கல்லூரி)

தோற்றம் 20.11.1942 | மறைவு 12.06.2024

கண் இமைக்கும் நேரத்தில்
கடந்து சென்றது ஒரு வருடம்
அல்லும் பகலும் எமக்காய் உழைத்த நீங்கள்
இன்று இல்லை எனும் போது
இதயம் கனக்கின்றது அப்பா!
என்றென்றும் எம் உள்ளத்தில் நீங்கள்
தெய்வமாய் உறைந்திருப்பீர்கள்...

271/6, நாவலர் ஒழுங்கை,
ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

பாசத்துடன்...
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(1185)

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org